திராவிடநாடு

1—9—60 | வார வெளியீடு | விலை 16 காசு

நவின்றனன் நன்மொழி

—[ச. ஆதிகேசவன்]—

—[●]—

சீர்பெரு தனியறை சிறப்புறு இல்லம்
ஏர்பெரு படுக்கை இன்புறு அமைதி
செந்தமிழ் நூல்களின் செப்புநல் அமிழ்தம்
பைந்தமிழ் அறிஞர்தம் பண்புடை வாய்மொழி
நன்றுறு விழைவுடன் நான்நாட லுற்றேன்;
மாண்புறு கவிஞன் மனக்கண் முன்னே
என்கொல் ஆய்வு இயம்புவீர் என்றான்.
அமிழ்தம் நூல்களில் ஆய்வுக் குற்றது
தமிழ்தம் பனுவலில் தக்கது பயில
எதுவென வினவினேன் இயம்ப லுற்றான்,
நவில்தொறும் நவில் தொறும் நலம்பல பயக்கும்
கவினுறு நன்னூல் ஆய்க என்றான்,
ஆய்முறை யாது? அதுவும் கூறுப
கற்பன கசடறக் கற்பீர் என்றான்
பாரினில் அறிவெது? பகர்வீர் என்றேன்
பரிவுடன் பக்கலில் பணிவுடன் வந்து
எப்பொருள் எவர்வாய் எங்ஙனம் இருப்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதே அறிவாம்
அறிஞர் சால்பெது அறைவீர் என்றேன்,
குணநலம் அன்புதான் கொல்லாமை வாய்மை
இன்னாசெய் தாரும் இன்புறும் வண்ணம்
பந்நலம் ஆற்றிப் பரவுதல் சால்பாம்
பல்சான் றீரே! பல்சான் றீரே!!
பல்பொருள் அழிந்தும் பாரிலில் அழியா
பெரும்பொருள் யாதெனப் புகலுவீர் என்றேன்
சீருடை உலகில் சிறந்தன ஆற்றி
செயற்கரிய செய்து செம்புகழ் ஓம்பி
பொன்றாது நிற்றல் பொலிவெனப் புகன்றான்,
நன்றி நவின்று நான் இனி திருந்தேன்.
நன்றெனக் கூறி நவின்றவன் சென்றான்.

கண் திறக்குமா?

—[கருணை]—

"ஜோசப் அந்தோனி!" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். இந்தப் பெயரைக்கொண்டு, நான் ஒரு வக்கீலோ, அல்லது ஒரு அலுவலக மேலாளரோ, அதுவுமன்று; எழுத்தர் வேலையோ போன்ற படித்த உத்தியோகம் பார்ப்பவன் என்று எண்ணிவிடாதீர்கள். நான் ஒரு கூலி. அதிலும் தேங்காய்மட்டை உரிக்கும் கூலி. நாள் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் ஊதியம்பெற்று வாழ்வையோட்டும் கூலி. அது இல்லையேல் வறுமை என்னை ஒட்டிவிடும். இந்நிலையில் உள்ள என்னை, எனக்கு வேலை கொடுத்து ஆதரிக்கும் அன்பர்தான் என் பெயர் கூறி அழைத்தார்.

அவரை நிமிர்ந்து பார்த்தேன். என் எதிரில், நான் உரித்துப் போட்டிருந்த மட்டைகளின்மேல் வந்தமர்ந்தார் அவர். நான் அவரைப் பார்த்தவாறு தேங்காயைக் கையில் எடுத்து உருட்டிக்கொண்டே கடப்பாறையில் சொருகி இழுத்தேன். அவர் எனது முகத்தைப் பார்த்துக்கொண்டேயிருந்துவிட்டு, "பேசும் போதாவது சற்றுநேரம் சும்மா இரேன்"! என்றார்.

"என்னுடைய நேரம் வீணாகுமே! அந்த நேரத்தில் இருபத்து ஐந்து காய் உரித்துவிடுவேனே!" என்றேன். அவர் அமைதியானார். ஏதோ கடமையின்றும் சிறிதும் தவறாமல் உழைப்பவன் என்று அவ்வாறு சொன்னதாக யாரும் நம்பிவிடக்கூடாது. எல்லாம் ரூபா அணாப் பைசாதான்!

தேங்காய் உரிப்பதில் கூலி என்ன தெரியுமா...? நூறு காய்க்கு நாலணா. ஆறு நூறு காய்கள் உரித்தால்தான் நாள் ஒன்றுக்கு ஒன்றரை ரூபாய் கிடைக்கும். நிலைமை இப்படி இருக்கிறபோது, இந்த மாதிரி உத்தியோகத்தில் என்னபேச்சு வேண்டிக்கிடக்கிறது! நாள்முழுதும் நீர் சொட்டச்சொட்ட உழைத்தாலும் மூன்று ரூபாயை எட்டிப்பிடிக்க உயிர் போய்த் திரும்பும். இதற்காகவே நான் பீடி குடிக்கும் பழக்கத்தையும் நிறுத்திப் பொடிபோட்டுப் பழகினேன். ஏனென்றால் பீடி குடிக்கும் அந்த நேரத்தில் நாலு காய்கள் உரித்து விடலாமல்லவா...... எனக்குத் தெரிந்த பொருளாதார தத்துவம் இதுதானே! இவ்வாறு நான் உழைப்பதைக் கண்ட உரிமையாளர் தினமும் இந்த வேலைக்கு என்னை அழைத்து வருகிறார்.

மலைபோல் குவிந்து கிடக்கும் இந்தத் தேங்காய்கள் என்னால் உரித்து அழகு செய்யப்பட்டு என்ன பலன்...? என்றுவது நான், இதில் ஒரு காயைச் சுவைத்தது உண்டா...? என்றால்... இல்லை! உழைப்பு எனக்கு; பலன் மற்றொருவருக்கு! இது யாரும் சொல்லித் தெரியாமல், எந்தப் புத்தகத்தையும் படிக்காமலேயே கற்றுக்கொண்ட உடைமை—உழைப்புக் கொள்கை!

அன்று ஒருநாள் கூட்டத்திற்குச் சென்றிருந்தேன்; யாரோ ஒருவர் அழகாக ஆணித்திறமாகப் பேசினார். இவ்வளவு நாட்களாக இந்த உழைப்பை நம் முதலாளிகள் அனுபவிக்கிறார்களே என்றுதான் நினைத்திருந்தேன்; அவர் கூறினார், இவை அவ்வளவும் வடக்கே செல்கிறதாம். அவர்கள் அதில் விதவிதமான பொருள்கள் செய்து கொள்ளை இலாபம் அடிக்கிறார்களாம். 'ஐயோ பாவம்! நமது உள்ளூர் முதலாளிகள்' என்று நினைத்துக்கொண்டேன். இரக்கம் உண்டானது. அதனால்தானே நமது நாடு பிறர் கையை எதிர்பார்த்து வாழவேண்டியிருக்கிறது என்று எண்ணி வருந்தினேன். எதிரில் அமர்ந்திருந்த உரிமையாளர் கனைத்துக் காட்டினார். நிமிர்ந்து பார்த்தேன். அவர் சிரித்துக்கொண்டே, "ஏதோ இந்தி எதிர்ப்பு வருகிறதாமே..." என்றார்.

நான் விரக்தியோடு, "இருக்குதுங்க..." என்றேன். அவர் விடவில்லை, "என்னப்பா ஊர் உலகமெல்லாம் எப்படி...? அதில் உன் நிலை என்ன...? என்றார். நான் சிரித்தபடியே அவர் முகத்தை ஏறிட்டுப் பார்த்தேன்.

*

"என்னப்பா நான் கேட்டது பற்றி மறுமொழியைக் காணோம்..." என்று உரிமையாளர் கேட்டதும் தான் என் சிந்தனைக் குதிரை நின்றது.

"எதையோ நினைத்து வேலையில் மூழ்கிவிட்டேன்; மன்னியுங்கள்!" என்றேன்.

"சரி, இந்திப் போராட்டம்பற்றி நீ என்ன முடிவு எடுத்திருக்கிறாய்? 14 மொழிகளை ஏற்றுக்கொண்டதாக அரசியல் சட்டம் இருக்கிறபோது இந்தி பொது மொழியாவதை ஏன் எதிர்க்கிறீர்கள்?" என்றார். அவரோ முஸ்லீம் மதத்தைச் சார்ந்தவர். கொஞ்சம் பசையுள்ளவர். எனவே அவர் இருக்க வேண்டிய இடத்தில் இருக்கிறார். அதனால் இவ்வாறுதான் அவரால் பேசமுடியும். அவருக்குச் சரியான விளக்கம் கொடுத்தால் தான் புரியும் என எண்ணிய நான், வேலையையும் விட்டுவிட்டு அவர் அருகில் போய் அமர்ந்தேன்.

"உண்மைதான்! அரசியல் சட்டம் ஆண்டவனால் கொண்டு வரப்பட்டதல்லவே! நம்மைப்போன்ற மனிதர்களால், அதுவும் வடவர் அதிகமுள்ள பாராளுமன்றத்தில் அவர்களுக்கு நன்மை என்று கருதி அதைக் கொண்டுவந்து விட்டனர். இப்போது அது தேவையில்லை என்று மாற்ற சுதந்தர மக்கள்—நம்மைப் போன்றவர்கள்—கூறினால் கேட்கவேண்டியதுதானே...! என்றேன்.

(4-ம் பக்கம் பார்க்க)

வெறியும் நெறியும்

ர் 19] ஆண்டுச் சந்தா ரூ. 8. (11—9—60) தனிப் பிரதி 16-காசு [இதழ் 9

விலங்குகளுக்கிடையே வேறுபாடு தோன்றுகின்றது; உடனே கண்களிலே கனல் எழ ஒன்றை ஒன்று பார்க்கின்றன; உறுமுகின்றன. வாய்ப்புக் கிடைத்தால் ஒன்றை மற்றது கிழித்துக் குதறிவிட முனைகிறது. எதுமாய்கிறதோ அது ஒழிய தப்பித்துக்கொள்ளுவது வாழுகின்றது.

விலங்கு நிலையிலிருந்து கொஞ்சங்கொஞ்சமாக விடுபட்டு விலகியவன் மனிதன். விலங்குக்கு உரிய பண்புகள் பழக்கங்கள் இவற்றை மெல்ல மெல்ல விட்டு ஒழித்து தனக்கெனத் தனிப் பழக்கங்களை, வழக்கங்களை வளர்த்துக்கொண்டு வாழத் தொடங்கினன். விலங்கிலிருந்துதான் வேறுபட்டவன் என்று உணரத்தலைப்பட்டான்.

இதற்குக்காரணம் அறிவு: மனிதனிடம் மட்டும் இருந்த சிறப்பு அது. மற்ற விலங்குகளுக்கு இல்லாத ஒன்று — பகுத்து உணரும் அறிவு—மனிதனுக்கு வாய்த்தது. எட்டாத இடத்திற்கு ஏணியின் துணையால் ஏறிச்செல்வதுபோல மனிதன் அறிவின் துணையால் தன்னை உயர்த்திக்கொண்டான். அறிவு வளர வளர மனிதனிடம் ஏராளமான மாற்றங்கள் தோன்றின. முதலில் விலங்கோடு இணைந்து வாழ்ந்த மனிதன் நாளடைவில் வாழ்க்கைமுறை, வசதிகள் இன்னோரன்னவற்றில் விலங்கைவிட்டு நெடுந்தொலைவு வந்து, தான் அதனின் முற்றிலும் வேறுபட்டவன் என்று கருதத்தக்க அளவுக்குப் புதிய முறைகளில், துறைகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டான்

குறிப்பாக விலங்கு, கண்ணுக்குத் தெரியாத மூளையைவிடக் கண்ணுக்குத்தெரியும் கையும் காலுமே நம்பி வாழ்கிறது. தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவும், தன்பகைவரைவாட்டிவருத்தவும் விலங்குக்கு உடல் வலிவு தேவை. ஆனால் மனிதனோ கையையும் காலையும் மட்டும் நம்பிக்கிடவாது மூளையை வளர்த்துக்கொண்டு அதன் துணையால் பல செயல்களை முடித்துக்கொள்ளத் தலைப்பட்டான். இது இது இப்படி இப்படி அமைந்தால் அது அது அப்படி அப்படி நடக்கும் என் முன்னதாக எண்ணத் தொடங்கி எண்ணத்தைச் செயல்படுத்தி வெற்றி கண்டான். இந்த முறையில் உடலுழைப்புக் குறைந்து, பயன் மிகுவதைக் கண்ட மனிதன் இதையே தன் நெறியாகக் கொண்டான். ஆனால் விலங்குகளுக்கு மூளையின் பயன் தெரியாத காரணத்தால் அவை கையையும் காலையுமே நம்பி இன்னமும் வாழுகின்றன.

மனிதன் தன் பகைவன் ஒருவனை உடனே ஒழித்துவிடவேண்டும் என்று எண்ணும் எண்ணமும் மெல்ல மெல்ல மறைந்து பகைவனைக் காணும்போது இவன் ஏன் நண்பனாக மாறக்கூடாது என்று எண்ணினன். நண்பனாக வேண்டுமாயின் தனக்கும் அவனுக்கும் இடையேயுள்ள இடைவெளி குறுகி இருவரும் இணையவேண்டும் என்பதை அறிந்தான். கருத்தால் உள்ள வேறுபாட்டைக் குறைத்துக்கொள்ள, தான் அவனோடு பேசத் தொடங்கி, தன் நிலையை விளக்கி அவன் நிலையை அறிய மாறுபட்டு 'இது குறை அது குற்றம்' என்று சிலவற்றைச் சுட்டிக்காட்டித் திரிந்த அறிவினைத் திருத்தி அவனைத் தன்னோடு இணைத்துக்கொள்ளவோ, அல்லது தான் அவனோடு இணைந்துவிடவோ தொடங்கினன். ஆனால் விலங்குகளுக்கு இந்த விவாத முறை தெரியாது. ஆகவே அவை ஒன்றோடு ஒன்று போருது தங்களை அழித்துக்கொள்ளுகின்றன. தன்னிழலைக் கண்டே கொதித்து எழுந்து அந்நிழலோடு போராட விலங்குகள் முனைகின்றன.

இதெல்லாம் பழங்கதை. மனிதனின் அறிவு குழந்தைப் பருவத்தில் இருந்தபோது இருந்த அமைப்பு. இன்று மனிதன் எத்துணையோ துறைகளில் எவ்வளவோ வளர்ச்சி கண்டிருக்கிறான். இன்று அடியும் அழுகையும், குத்தும் வெட்டும் மனிதன் அறியாதவையாக இருக்கவேண்டும். அடித்து ஆறுவதோ, வெட்டி வீழ்த்துவதோ அநாகரிக முறை, காட்டுமிராண்டியின் செயல் என்று மனிதன் கருதவேண்டிய அளவுக்கு அவன் நிலை உயர்ந்திருக்கிறது.

ஆனால் இன்று நிலை என்ன? நினைத்தாலே நெஞ்சம் நைகின்றது; நோகின்றது, கண்கள் கலங்குகின்றன. பேதத்தைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்ற நிலைமாறி, ஏசி மகிழலாம் என்ற நிலை வந்துவிட்டது. பேச்சும் ஏச்சும் ஒலிகள்தாம் எனினும், ஒன்றுக்கொன்று துருவங்களாக விலகி நிற்பவை. முன்னது சான்றோர் வேட்பவை; பின்னதோ பேதையர் நெறி.

இன்று அதைவிட நிலைமை திரிந்து அடியும் உதையுமே பயன்படுகின்றவை என்று கருதும் அளவுக்குச் சிலர் சென்றுவிட்டனர். கருத்தைத் திருத்தலாம் என்ற நினைப்பே எழாமல் கருத்துக்கு உரிய

ஆளையே தீர்த்துவிடலாம் என்று எண்ணமிடத் தொடங்கிவிட்டனர். மூளை ஆற்றலை நம்பிய காலம் போய் முரட்டு ஆற்றலை நம்பும் காலம் வந்துள்ளது. அறிவு ஆயுதம் என்றிருந்த எண்ணம் மறைந்து, கருவியைக் கையேந்தும் நிலை பிறந்துள்ளது. இதனால் அடிக்கடி நாட்டிலே வெட்டுக்களும் வேதனைகளும் ஏற்படுகின்றன. பிற துறைகளில் இருப்பதைவிட அரசியல் துறையில் இந்த அவலநிலை வளர்கின்றதைக் காணுகின்றோம். அதிலும் குறிப்பாக ஆளும் கட்சிக்கு எதிர்க்கட்சியில் உள்ளோரில் பலர் அடிக்கப்பட்டனர், துரத்தப்பட்டனர், வெட்டப்பட்டனர்; உயிருக்கு ஆபத்து, கவலைக்கிடம், உயிரே போய்விட்டது, உடனே பிணமானான், என்பன போன்ற செய்திகளைக் கேள்விப்படுகின்றோம். இதனால் அடிப்பவர்களுக்கு அற்ப மகிழ்ச்சி தோன்றலாம். ஆளவந்துள்ளவர்களும் அகம் மகிழலாம். தங்கள் கட்சியின் 'வீரம்' கண்டு பூரிக்கலாம். ஆனால் ஆளவந்தவர்கள் இதனை நன்கு எண்ணிப்பார்க்கவேண்டும். மாறுபட்ட எண்ணம் கொண்டோர் இந்த நாட்டில் பாதுகாப்போடு வாழமுடியாத நிலை ஏற்படுகின்றது என்பது அவர்களுக்குப் பெருமை அன்று. பீதியைக் கிளப்பி விட்டு ஆளுவதைவிட; நீதியை நிலை நிறுத்தி ஆளுவதே பெருமை; சிறப்பு.

குறிப்பாக, கழகத்தோழர்கள் பல இடங்களிலே தாக்கப்படுகின்றனர். தாய்நாட்டுக்காக இன்னுயிரே யாயினும் ஈந்திடத் துடிக்கும் மறவர், விழலுக்கு நீர் பாய்ச்சுவதைப்போல வீணர்தம் வெட்டரிவாளுக்கு இரையாகும் இழிநிலை நாளும் வளர்கின்றது. கோவை குடந்தை என்று வளர்ந்த பட்டியலில் இன்று குன்றத்தூரும் இடம் பெறுமோ என்ற அச்சம் வந்துள்ளது. இது அறமும் அன்று; மறமும் அன்று. என்னவோ நடக்கிறது என்று எக்களிப்போடு இருக்கும் நிலையைவிட்டு அமைச்சர்கள் இறங்கி வரவேண்டும். ஏன் நடந்தது என்று அறிய வேண்டும். குறை திருத்தி—மக்களுக்கு—குறிப்பாக எதிர்க்கட்சிகளுக்கு—பாதுகாப்பான வாழ்க்கையை ஏற்படுத்த முயலல் வேண்டும். அதுவே நெறி. வெறியை வளரவிடுவது அவர்களுக்கே ஆபத்து! தன்னிழலைக் கண்டு தானே கிணற்றில் பாய்ந்து அழிந்தது ஒரு சிங்கம், என்று கதை உண்டு. அந்நிலைக்கு அவர்கள் வரக்கூடாது.

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

"இந்தியாவுக்குப் பூராவும் பொதுமொழி அவசியம்தானே..." என்றார்.

"சரி; நாம் கல்லறைக்குப் போகிறோம் என்று வையுங்கள்..." என்று நிறுத்தினேன். அவர் திகைத்து, "என்னப்பா அதுக்குள்ளாகக் கல்லறை இல்லறைன்னு பேசுறே...?" என்று கேட்டார். இதைக்கேட்ட நான் நகைத்துக்கொண்டேன். இந்த மனிதருக்குத்தான் இறப்புலகு செல்ல எவ்வளவு பயம் என்று உள்ளத்துக்குள் கூறிக்கொண்டே,

"அது இல்லைங்க...பல கல்லறைகளைத் தோண்டி எடுத்து, எலும்புகளைப் பொறுக்கி இணைத்து வைத்து, இதுதான் இறந்துபோன ஏசுதாசன் என்று கூறினால்......எப்படி இருக்கும்?" என்று கூறி நிறுத்தினேன்.

'பயித்தியக்காரன்கூட அப்படிக் கூறமாட்டானே' என்றார்

"அவ்வாறு பயித்தியக்காரன் கூறினால்கூட ஏதோ மூளைக் கோளாறு என்று இருந்துவிடலாம். ஆனால் பயித்தியங்களுக்குத் தலைவன்கூட இல்லை...இந்த நாட்டை ஆளுகிற அமைச்சர்கள்தான் அப்படிக் கூறுகிறார்கள்..." என்றேன்.

"சே, சே! விளையாட்டாகச் சொல்றியா...?" என்றார்!

'உண்மைதான்! மராட்டியம், வங்காளம், ஆந்திரம் பஞ்சாப், கேரளம், கன்னடம்' தமிழ் இது போன்ற பல துண்டுகளை ஒன்றாக இணைத்து இதுதான் இந்தியா. இதில் இந்திதான் எல்லாரும் படிக்கவேண்டிய மொழி என்றால், என்னங்க பொருள்...? இந்தி பேசுகிற பகுதி மக்களிடத்திலேயே ஒருவர் பேசுவது இன்னொருவருக்குப் புரியவில்லை. பாராளுமன்றத்திலேகூட அடிக்கடி இதுபோன்று நடந்திருக்கிறது. அவர்களுக்குள்ளேயே சண்டு பிடித்துக்கொள்கின்றனர். இந்த இலட்சணத்தில் இந்தி படித்தால்தான் வேலை உயர்வு என்றால் என்ன பொருள்?

நாம் இருவரும் வேறு வேறு மதம். ஆனால், தமிழால் ஒன்றுபட்டவர்கள். இருந்தும் நம்மை, வேற்றுமொழியால் அடிமையாக்கப்படுவதைத் தடுத்தாக வேண்டுமல்லவா...இல்லை, நம்முடைய தலைமுறை தலைமுறையாக அடிமையாகி நசுங்கிச் சீரழிந்து தெருவில் நிற்க வேண்டியதுதான்.

"நீ சொல்வதைப் பார்த்தால் இதில் சாதி, சமயம், கட்சி வேறுபாடு காட்டாமல் அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் என்கிறாய்" என்றார். "ஆமாம்" என்றேன். அதற்கு அவர், "எங்கள் மதத் தலைவர்கள்தான் ஆளுங் கட்சிக்கு விரோதமாகப் போகக்கூடாது; அவர்களை விரோதிக்கக் கூடாது என்று பேசுவாங்க......" என்றார்.

அவர்களுக்கு நம்மைப்போன்றவர்கள்தான் நிலை விளக்கம் கூற வேண்டும்.

"உண்மைதான் ஜோசப்! இது பற்றி என்னிடம் வேலை செய்யும் அனைவரையும் கலந்து ஆவன செய்வோம்" என்றார். என் மனம் என்றுமில்லா இன்பத்தை அடைந்தது, வீறுகொண்ட புலியை முறத்தால் எதிர்த்து ஓட்டிய வீரத்தாயின் நிழலுருவம் என் கண்முன் தோன்றி மறைந்தது. நாடும், மக்களும், விழிப்புணர்வு பெற்றுவிட்டனர். தொல்லை தரவிருந்த இந்திப் பேயை ஓட்டி விரட்டிய வெற்றிப் பெருமிதம் கொண்டேன். நிமிர்ந்த நடையினனாக, திண் தோள்கள் சிலிர்க்கச் சென்றுகொண்டிருந்த இளம் காளையர் கூட்டம் என் முன் வரிசை வரிசையாக அகமகிழ்ந்து நகர் வலம் வரும் காட்சி நிழற் காட்சிபோல என் கண்களுக்குத் தெரிந்தது. மக்களின் விழிப்புணர்வே 'நாட்டு விடுதலை' என எனக்குள் கூறிக் கொண்டேன்.

★

மொழிப் பிரச்சினையில்
விழிப்புணர்வு தேவை

5--9--61ல் சென்னை சட்ட சபையில் மொழிப் பிரச்சினை பற்றிச் சி. என். ஏ. ஆற்றிய உரை.

மொழிப் பிரச்சினை பற்றி நம்முடைய சட்ட மன்றத்திலே இதற்கு முன்னால் இரண்டொரு முறை விவாதித்திருந்தபோதிலும், இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் பரபரப்பான நிகழ்ச்சிகள், நாட்டில் நடைபெற்ற எதிரொலிகள், இதன் மேல் எழுந்த அரசியல் விவாதங்கள் பொதுமக்கள் உள்ளத்திலும் பரவியிருக்கும் காரணத்தினால், மொழிப்பிரச்சினை சட்டமன்றத்திலே இப்போது கவனிக்கப்படுவது பொருத்தமானது என்று கருதுகிறேன். அவ்வளவு பொருத்தமான விவாதத்தில் நாங்கள் கலந்துகொள்ளக் கடைசி நேரத்தில் மறுத்துவிடுவார்களோ என்று அச்சப்பட்டேன். ஆனால், இன்று காலையில் நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். "நான் வரவேற்கிறேன், அவர்கள் இதில் கலந்துகொள்வதை" என்று. ஆனால் இதில் எங்கள் கருத்தைச் சொல்வதன்மூலம், எங்கள் பிரிவினைக்கொள்கை விஷயத்தில் ஏதோ மாறுதல் ஏற்பட்டிருக்குமோ என்ற எண்ணமும், ஒன்றுபட்ட இந்தியாவை ஆதரிக்கிறோம் என்ற எண்ணமும் தொனிக்கப் பேசினார்கள். எங்களுடைய கட்சி விஷயத்தில் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் புதிய அக்கரையை நான் நன்றியறிதலோடு வரவேற்றுப் பாராட்டுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகக் கருத்துக்களை எடுத்துச் சொல்லும்போது, எங்கள் மூலாதாரக் கருத்துக்கள் பாதிக்கப்படாத அளவுக்கு பார்த்துக்கொள்ளப் போதுமான திறமை எங்களிடம் இருக்கிறது என்று தெரிவித்துக்கொண்டு, எப்பொழுதாவது எங்கள் திறமையில் குறை ஏற்பட்டால், வேறு கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், நண்பர் என்ற முறையில், அது சரியல்ல என்று எடுத்துச் சொல்லி எங்கள் கட்சிக்கு நிதி அமைச்சர் வலியூட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். (சிரிப்பு) ஏனென்றால், இந்த மொழிப் பிரச்சினை பற்றி பேசும் நேரத்தில் யாரும் ஒளிவு மறைவு இல்லாமல், இந்த ஒரு விஷயத்திலாவது, பேசுவது நல்லதென்று கருதுகிறேன்.

இந்த மொழிப் பிரச்சினையில், இன்றையதினம் ஆளும் கட்சியாகவிருக்கும் காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கைகளைப் பல ஆண்டுகளாகக் கவனிக்க வேண்டும். இதில் திராவிட இயக்கத்தை நடத்தும் எங்கள் கட்சிகளுக்கு இருந்திருக்கிற அக்கரையையும் உண்மையிலேயே கூர்ந்து கவனிக்க வேண்டும். காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சியாக ஆவதற்கு முன்னாலேயே, இந்தி தேசிய மொழி, என்று சொல்லி நாட்டில் இந்திப் பிரசாரத்தில் நீண்ட காலத்திற்கு முன்னாலேயே இறங்கி, காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் இந்தியாவுக்கு இந்தியே பொதுமொழி, சுயராஜ்யம் அடைந்தபிறகு செய்யப்போகும் முதல் காரியம் அதுவே என்று வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். அந்த நேரத்திலெல்லாம், நாங்கள் நடத்திவரும் தமிழ் இயக்கமோ, திராவிட இயக்கமோ, இந்திக்குக் கணிசமான எதிர்ப்பினை நடத்தி வந்திருப்பதில் ஒரு ஒருமைப்பாடு இருக்கிறது, 25 ஆண்டுகளாக. காங்கிரஸ் கட்சியிலும் இதில் ஒருமைப்பாடு இருக்கிறது என்றாலும்; காலத்திற்குக் காலம், எதிர்ப்புணர்ச்சிக்குத் தக்கபடி மாறுதல் அடைந்திருக்கிறது. மாறுதல் என்று சொல்லும்பொழுது, குறை சொல்லுகிறேன் என்று யாரும் கருதவேண்டாம்; மாறுதல் வளர்ச்சிக்கு அடையாளம். அவர்கள் உலகத்தை அறிந்துகொண்டார்கள் என்பதற்கு அந்த அவர்கள் பண்பினை எடுத்துக் காட்டுகிறேன்.

காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சியான பிறகு, இந்தி மொழியைப் பரப்ப ஏற்படுத்திய குழுக்கள் மூன்று. அரசியல் நிர்ணய சட்டசபை ஒன்று; அப்பொழுது அங்கு பேசப்பட்டதையெல்லாம் கனம் நிதியமைச்சரவர்கள் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும் என்று கூறிக்கொள்ளுகிறேன். அதன் பிறகு, காங்கிரஸ் (ஒர்க்கிங் கமிட்டி,) செயற்குழுவில் தீர்மானித்திருக்கிறார்கள். இன்னொன்று, இந்தி சாகித்ய சம்மேளனம் என்ற இந்திக் குழுவிலும் செய்திருக்கிறார்கள். ஆக, மூன்று தனித்தனிக்

ஆட்சிமொழி—இந்தி—அவசரத் தீர்மானம்!

குழுக்களிலே கவனிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினை அரசியல் நிர்ணய சபையிலே வந்த நேரத்திலே, அந்தச் சபையில் நமது நிதியமைச்சரவர்கள் அங்கம் வகித்து இருந்திருக்கிறார்கள். அந்த விவாதம் நடைபெற்ற குறிப்பேடுகளை ஆவலோடு படித்துப் பார்த்தேன். விஷயங்கள் சுவையுள்ளது என்பதற்காக மட்டுமல்ல, சூடான விஷயங்களும் அதில் அடங்கியிருக்கின்றன—அப்பொழுது நம் நிதியமைச்சரவர்கள் அங்கம் வகித்தார்களே, அவர்கள் இந்தியைக் கையாள்வதுபற்றி என்ன பேசியிருக்கிறார்கள் என்று துருவித்துருவிப் பார்த்தேன். வருத்தப் பட்டேன்; மிகச் சிக்கலான ஒரு பிரச்சினை விவாதத்திற்கு வந்து, உறுப்பினர்கள் தம்கருத்தினை திட்டவட்டமாக எடுத்துச் சொன்னபோது, நிதி அமைச்சர் ஒருவித கருத்தையும் சொல்லாமல் இருந்திருக்கிறார்கள். அதில் நழுவிக் கொண்டார்கள் என்று சொன்னால், அது சரியல்ல என்று சொல்லக்கூடும். ஆனால், மொழிப் பிரச்சினை வரலாற்றில், ஒரு முக்கியமான பாகம் எழுதப் படாமல் போய்விட்டது. என்ன பேசினார்கள், விவாதத்தில்? நடைமுறையில் கொண்டுவருவது பற்றி? என்று பார்த்தால்ஒன்றுமில்லை, நடுவே ஒரு விளக்கம் கொடுத்தார்கள் என்பதைத் தவிர.

கோவை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. இராமலிங்கம் செட்டியார் அவர்கள்—ஒரு சமயம் இங்கே முதல் அமைச்சராக இருந்தவர்—இன்றையதினம் இந்தியத் துரைத்தனத்தில் அமைச்சராக இருக்கும் டாக்டர். சுப்பராயன், இவர்கள் எல்லாம் பேசிய நேரத்திலே, நமது நிதியமைச்சர் பேசாமல் இருந்ததைப் பார்த்து மிக்க வருத்தப்பட்டேன். (குறுக்கீடு)கௌரவமாக பேசவில்லை என்று சொன்னேன். சான்ஸ் கிடைக்கவில்லை என்று லால்குடி உறுப்பினர் சொல்கிறார்கள். அப்படிச் சொல்லத் தேவையில்லை. இந்தச் சிக்கலான, முக்கியமான பிரச்சினை விவாதிக்கப்பட்ட நேரத்திலே, அவர்கள் காட்டவேண்டிய அக்கறையைக் காட்டாமலே இருந்திருக்கிறார்கள். ஏறக்குறைய 300 திருத்தங்கள் கொடுக்கப்பட்டு, திரு. கோபாலசுவாமி ஐயங்கார் கொடுத்த அதிகாரபூர்வமான தீர்மானம் விவாதிக்கப்பட்ட நேரத்திலே, நம் சட்டசபையிலே விவாதிப்பது போலல்லாமல், திருத்தம் திருத்தமாக விவாதிக்காமல், ஒட்டுமொத்தமாக எல்லாத் திருத்தங்களையும் எடுத்துக்கொண்டு, யார் யார் என்னென்ன கருத்தைச் சொல்லவேண்டுமோ அவைகளைப் பேசினார்கள்; அப்படிப் பேசும்போது, தங்கள் தங்கள் தீர்மானங்கள் மீதும் பேசி, ஏற்படுத்திய ஒரு குழப்பத்தைத் தவிர, இந்திய துணைக்கண்டத்திற்கு ஆட்சிமொழியாக என்ன மொழி இருக்கவேண்டும் என்ற ஒரு பிரச்சினையில் காட்டப்படவேண்டிய ஆவல், செலுத்தப்படவேண்டிய அக்கறை, காட்டப்படவில்லை, செலுத்தப்படவில்லை; காட்டப்படவேண்டிய திறமை, காட்டப்படவில்லை. இப்பொழுது படித்துப் பார்த்தாலும், நிதியமைச்சரவர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறேன். முன்பு ஒரு முறை இந்தச் சபையில் குறிப்பிட்டேன்: இந்தியத் துணைக்கண்டத்திற்கு விடுதலை கிடைத்த காரணத்தினால், விடுதலை பெற்றுத் தந்தவர்கள் என்ற விருது பெற்றவர்கள் என்ற எண்ணத்திலும், இந்த நாட்டை நடத்துவதற்குப் பொறுப்பு நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதுஎன்ற எண்ணத்தோடும் அங்கே கூடியிருக்கும் நேரத்திலே, ஒருவருக்கொருவர் அன்புரைகளைப் பரிமாறிக்கொள்ளும்போது, எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதை எண்ணிப்பார்க்காமல் செய்த முடிவுதான் இந்த இந்தி ஆட்சிமொழி என்று இருக்கும் அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவு என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவிக்கவிரும்புகிறேன். அரசியல் சட்டத்திலே அந்தப் பதினேழாவது பிரிவு நல்ல முறையிலே திருத்தி அமைக்கப்படாத வரையில் அதிலே புதிய கண்ணோட்டம் செலுத்தப்படாத வரை, காலத்திற்கேற்ப மாற்றியமைக்காத வரை, இந்தச் சிக்கல்கள், இந்தப் பிரச்சினை, குழப்பங்கள், நிச்சயமாக மீண்டும், மீண்டும் தலை தூக்கிக்கொண்டுதான் இருக்கும். அஸ்ஸாம் அளவுக்குச் செல்லவில்லையென்றாலும், தமிழன் போக்கு விவாத அளவோடு நிற்குமா என்று இப்பொழுதுப் பேசத் தேவையில்லை என்றாலும், மொழிவெறி, மொழிஆதிக்கம் காரணமாக குழப்பம் ஏற்படும் நேரத்தில், யாராலும் எதையும் தடுக்கமுடியாது; விரும்பத்தகாத விளைவுகள் நிச்சயமாக ஏற்பட்டே தீரும். ஆகையால், இந்தியாவுக்கு ஆட்சிமொழி இந்தி என்று தீர்மானித்தது, சரியான சூழ்நிலையில், நல்லவிதமாக விவாதித்து எடுக்கப்பட்ட தீர்மானம் அல்ல என்பதனை நம் நிதியமைச்சரவர்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

அரசியல் நிர்ணய சபையிலே பலவாறு குறிப்பிட்டார்கள். நல்லவிதத்தில் வாதிக்கப்பட்டு அது முடிவு எடுக்கப்பட்டதல்ல. இதைச் சொல்லும்போது அப்படி நான் சொல்வது மட்டுமல்ல, நமது மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்களுக்கும் நினைவு இருக்கும் என்று கருதுகிறேன், அரசியல் நிர்ணயசபையில் இப்படியே பலர் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப் பற்றி எடுத்துக்காட்டிச் சொல்லி இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக ஒரு அங்கத்தினர் அதைப்பற்றித் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். இங்கு 315-பேர் கூடி இதற்கு வழி கண்டுபிடிக்கத் தேவையில்லை; அதை இந்நாட்டு மக்களுக்கு விட்டுவிடலாம் என்று

பிரச்சினை: இந்தி என்னு? அரபி என்னு என்பதுதான்!

அவர் தெளிவாக எடுத்துச்சொல்லி இருக்கிறார். இன்னும் பலர் அதைப்பற்றி விவாதித்திருந்தாலும் விவாதத்தின் கடைசியில் க்ளோஷர்மோஷன் கொண்டு வந்து இதுவரையில் விவாதித்தது போதும் என்றும், இனிமேல் முடித்துவிடலாம் என்றும் சொல்லி இருக்கிறார்கள். சற்றுத் தொடரலாம் என்று இன்னொரு உறுப்பினர் சொன்ன நேரத்தில் நமது மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் எழுந்திருந்து இந்தப் பிரச்சினை இப்பொழுது தேவை இல்லை; புதிய திருத்தம் வரும்; அந்தக் காலத்தில் இதைப்பற்றி எடுத்துச் சொல்லலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார். அப்பொழுது கவனித்துக்கொள்ளலாம் என்றும் செல்லி இருக்கிறார்.

இதனை அரசியல் நிர்ணயசபைத் தலைவர் ஏற்றுக்கொண்டு க்ளோஷர் மோஷனுக்கு இடம் கொடுத்து விட்டு விவாதத்தை முடித்துவிட்டுக் கடைசியில் இரண்டொரு திருத்தத்தை மட்டும் வோட்டுக்கு விட்டார். அவை தோற்கடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டபோது கனம் டி. ஏ. இராமலிங்கம் செட்டியார் அவர்கள் தம் திருத்தத்தைப்பற்றி வோட்டு எடுக்க வேண்டும் என்று சொல்லியபோது கையை உயர்த்தி வோட்டுகள் எடுக்கப்பட்டன. அந்தத் திருத்தத்திற்கு ஆறு வோட்டுகள் கிடைத்ததாக அரசியல் நிர்ணய சபைக்குறிப்புப்புத்தகத்தில் இருக்கிறது. அந்த ஆறு கரங்களில் நமது மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்களுடைய கரமும் இருந்ததோ என்னவோ அதைப் பற்றிக் குறிப்பிடவில்லை. அப்படி அவருடைய கரம் இருந்திருந்தால் அது தமிழ் நாட்டினுடைய நல்ல கரம்தான். அவருடைய கரம் இல்லாது இருக்குமானால் உண்மையிலேயே அவருடைய கரம் நமக்கு பயன்படாமல் போய்விட்டது என்றுதான் கருத வேண்டும். (சிரிப்பு) இப்படி எவ்வளவோ பல திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுத் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றன. அந்த முறையில் நிறைவேற்றப்பட்ட அரசியல் நிர்ணய சட்டத்தில் இருக்கக்கூடிய 17-ஆவது பிரிவு மொத்தமாகத் திருத்தி அமைக்கப்படவேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடையது மட்டுமல்ல, இந்திய துணைக்கண்டத்திலுள்ள பலருடைய கருத்துமாகும்.

இந்தியா ஒன்றாக இருக்கவேண்டும் என்று கருதுகிறவர்கள் மட்டும்தான் இதைப்பற்றிப் பரிசிலனை செய்யவேண்டும்; மற்றவர்கள் இதைப்பற்றிப் பேசவேண்டியதில்லை என்று சொல்லக்கூடிய கருத்து உண்மையிலேயே தவறான கருத்தாகும். அது பொருத்தமான வாதமாகாது. இந்தியா இப்பொழுது சுயராஜ்யம் அடைந்துவிட்டது; சுயராஜ்யம் கிடைப்பதற்கு முன்னால் உப்புச் சத்யாக்கிரகம் செய்தபோது சுயராஜ்யம் கிடைத்துவிட்டால் உப்பு வரியை எடுத்துவிடுவோம் என்று சொன்னார்கள். வெள்ளைக்கார ஆட்சி நடந்தபோது உப்புச் சத்யாக்ரகம் செய்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளை விரட்ட வேண்டும் என்று சொன்னார்கள். அதன் பிறகு சுயராஜ்யம் கிடைத்துவிட்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளை விரட்டிவிட்டார்கள். அவர்களுக்குப் பதில் இப்பொழுது தேசியத் தலைவர்கள் அல்லது அவர்களுடைய இரண்டாவது தலைமுறை இப்பொழுது ஆட்சியில் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். இப்பொழுது ஏகாதிபத்தியவாதிகள் போய்விட்டார்கள், ஆனால் ஏகாதிபத்தியம் இருக்கிறது.

வெள்ளைக்கார ஏகாதிபத்தியம் போய், உள்நாட்டு ஏகாதிபத்தியம் வந்திருக்கிறது. வெள்ளைக்காரர் அவர்களுடைய ஏகாதிபத்தியத்தை மற்றவர்களுக்கு அளித்துவிட்டுப் போய்விட்டார்கள். இப்பொழுது இருக்கிற நிலைமையைப்பற்றி எடுத்துச்சொல்ல எந்த குடிமகனுக்கும் உரிமை இருக்கிறது. சுதந்தரப்போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தாலும் சரி, சுதந்தரப் போராட்டத்தில் கலந்துகொண்டிருக்காவிட்டாலும் சரி, சுதந்தரம் கிடைத்த பிறகு ஆளும் கட்சியுடன் குலவுபவனாக இருந்தாலும் சரி, எந்தக் குடிமகனாக இருந்தாலும், அவன் இந்த இந்தியத் துணைகண்டத்தில் இடம் பெற்றிருக்கக்கூடியவனாக இருந்தால், அவனுக்கு இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையைப் பற்றி எடுத்துச் சொல்வதற்கு வேண்டிய உரிமை இருக்கிறது. இப்பொழுது இருக்கிற சட்ட திட்டங்கள், பாகுபாடுகள், இவைகளைப்பற்றியெல்லாம் எடுத்துச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. அவரவர்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வேண்டிய உரிமை எல்லாக் குடி மகனுக்கும் இருக்கிறது. இதனை நமது நிதி அமைச்சர் அவர்கள்

வாசகர்களுக்கு

இந்த இதழில் மொழிப் பிரச்சினை பற்றிய சட்டசபைப் பேச்சு வெளியிடும் அவசியம் ஏற்பட்டதால், தம்பிக்கு எழுதும் கடிதமும், அந்திக் கலம்பகமும் இடம் பெற முடியாமல் போய்விட்டது.

அடுத்த இதழ் முதல் தம்பிக்கு எழுதும் கடிதமும், அந்திக் கலம்பகமும் தொடர்ந்து வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கொங்கு கேட்காததை வங்கம் கேட்கிறது!

மறுக்கமாட்டார் என்றே நினைக்கிறேன். இன்று காலை கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் வரவேற்கிறேன். அவர் எவ்வளவோ தெளிவாகச் சொல்லியிருக்கிறார். நாட்டுப்பிரிவினையைப்பற்றி இன்னும் சொல்லிக்கொண்டிருந்தால் நாட்டின் ஒற்றுமை கெட்டுப்போய்விடும் என்று சொல்லுகிறார்கள்.

நாட்டைப் பிரிக்கவேண்டும் என்றால், தெற்கே உள்ளவர்களுக்கும், வடக்கே உள்ளவர்களுக்கும் இந்தியத் துணைகண்டத்தில் விரோதம் வந்துவிடும் என்ற பொருள் இல்லை. பிரிந்துபோவதால் விரோதம் வந்துவிடாது என்பதற்கு எடுத்துக்காட்டாக நமது பிரதம மந்திரி நேரு அவர்கள் நம்முடைய இராஜ்யத்திலிருந்து கராச்சிக்குப் போகிறார். பிரிந்துபோன பாகிஸ்தானுக்கு அவர் போகவேண்டிய காரணம் என்ன என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். இதனை நான் சொல்லும்போது அண்ணாதுரை பண்டித நேரு அவர்களுடைய அந்தஸ்துக்குத் தன்னை உயர்த்திக் கொள்ளுகிறார் என்று காங்கிரஸ்காரர்கள் நினைத்துக் கொள்ளலாம். அப்படி அவ்வளவு பெரிய இடத்திற்கு என்னை உயர்த்திக்கொள்ளுகிறேன் என்று நினைத்தால், அது தவறான எண்ணம் என்றுதான் நான் கருதுகிறேன். அந்த முறையில் பேசும்போது அவ்வளவு உயர்ந்த பதவியில் உயர்த்திக்கொண்டு நான் பேசுகிறேன் என்று கருதவேண்டாம். பிரிந்து போவதால் ஏற்படக்கூடிய மனக் கசப்புத் தானாகப் போய் விடும். ஆகவே இந்தப் பிரச்சினையைப்பற்றி விவாதிப்பதற்கு நிச்சயமாக இடம் இருக்கிறது.

இந்தியத் துணை கண்டத்திற்கு தனியான ஆட்சி மொழி வேண்டியது அவசியம்தான், இந்திய துணைக் கண்டம் விடுதலை அடைந்த உடனேயே அதைப் பற்றி முடிவு செய்திட வேண்டும். இப்படிப்பட்ட அடிப்படைப் பிரச்சினையில் அப்பொழுதே கவனம் செலுத்திட வேண்டும், என்ற எண்ணத்தில் அப்பொழுதே அரசியல் நிர்ணய சபையில் உட்கார்ந்து கொண்டு முடிவு செய்திருக்கிறார்கள். அப்பொழுது நம்முடைய மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்களும் அங்கே இருந்திருக்கிறார். அப்பொழுது அங்கே இந்தி வெறியர்கள் இருந்திருக்கிறார்கள். அதை அவர் மறுக்கமாட்டார் என்று நினைக்கிறேன். அப்பொழுது அந்த அரசியல் நிர்ணய சபையில் இந்தி மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டு வருவதைப்பற்றி ஒருவரும் எதிர்த்துச் சொல்லவில்லை. அந்தஇடத்தில் இந்திஎண்ணைப்பற்றிதான் பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது. இந்தி எழுத்திலுள்ள எண்ணைக் கொண்டு வருவதா அல்லது அரபி எண்ணைக் கொண்டு வருவதா என்ற பிரச்சினைதான் எழுப்பப் பட்டிருக்கிறது. அது சம்பந்தமாகத்தான் பல கருத்துக்களை அவர்கள் மறுத்து மறுத்துப் பேசியிருக்கிறார்கள். அப்படிப் பேசியபோது இந்தி வெறியர்களில் ஒருவர்கூட இதைப்பற்றிப் பேசியிருக்கிறார். இந்தி தேசிய மொழியாக இருக்கவேண்டும் என்று அவர் சொன்ன நேரத்தில் அதை விரும்பாத ஒரு உறுப்பினர், இந்தி மொழி தேசிய மொழி அல்ல, ஆட்சி மொழி, நிர்வாக மொழி என்று சொன்னார். அதற்கு இந்தி வெறியர்,

> "You may call it official language, but I call it national language. You may belong to another Nation, but I belong to the Indian Nation. You may oppose and walk out; but I do not approve of your view."

என்றெல்லாம் பேசியிருக்கிறார். அவருடைய பேச்சுக்கு எவ்வளவு தூரம் கவனம் செலுத்தப்பட்டது என்பதைப்பற்றி எனக்குத் தெரியாது. அதைப் பற்றிக் கனம் நிதி அமைச்சருக்கு நன்றாகத் தெரியும். அப்பொழுது நடந்த விவாதம் எல்லாம் இந்தி எண்ணைக் கொண்டுவருவதா அல்லது அரபு எண்களைக் கொண்டு வருவதா என்பதுதான். இந்திதான் ஆட்சி மொழி என்று முடிவு செய்துவிட்டார்கள். அதன் பிறகு கௌகத்தி மகாநாட்டில்தான் இதைப் பற்றி மறுமுடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆட்சி மொழி ஒன்று இல்லாவிட்டால் நாட்டில் ஒற்றுமை இல்லாத நிலை ஏற்பட்டுவிடும் என்று சொல்கிறார்கள். சரித்திரத்தை நாம் பார்க்கவேண்டும். அதற்கு வேண்டிய ஆதாரத்தைத் தேடிப் பிடிக்கவேண்டும். ஸ்விட்சர்லாந்து நாட்டில் நான்கு ஆட்சி மொழிகள் இருந்தும் நூற்றுக்கு ஒருவர் பேசக்கூடிய ஒரு மொழியையும் ஆட்சி மொழியாக ஆக்கியிருக்கிறார்கள். அதனால் ஒற்றுமை குலைந்துபோகவில்லை. சுவிட்சர்லந்தைக் கவனித்துப் பார்க்கவேண்டும். அங்கு ஆட்சி மொழி என்ன, அதனுடைய நிலை என்ன என்பதைப் பார்க்கவேண்டும்.

நான் அங்கு சென்றிருக்காவிட்டாலும் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கிறேன். நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள் கூடிய சீக்கிரத்தில் அந்த இடங்களுக்குச் செல்ல இருக்கிறார். அவர் அங்கு போகக்கூடிய காலத்தில் அதைப்பற்றி நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். அவர் தன்னுடைய சுற்றுப் பிரயாணத்தில் இதைப்பற்றியெல்லாம் தெரிந்து கொள்ளலாம். சுவிட்ஜர்லண்டில் ஒற்றுமைக் குலைந்து போய்விட்டதா என்பதையும் பார்க்கவேண்டும். கனடாவில் ஒற்றுமைக் குலைந்துவிட்டதா? ஆங்கிலம் பிரஞ்சு இரண்டும் ஆட்சி மொழியாக இருக்கக்கூடிய இடத்தில் ஒற்றுமைக் குலைந்துபோய் விட்டதா?

இந்திக் கோட்டை இடிகிறது சரிகிறது

வேறு எந்த இடத்திலும் ஒற்றுமைக்குப் பங்கம் ஏற்படாமல் இருக்கும்போது, இந்த நாட்டில் மட்டும் ஒற்றுமை குலைந்துவிடும் என்று சொல்வதற்கு என்ன காரணம்? ஒரு மொழிக்கு வளம் இல்லாமல் இருக்கலாம், இலக்கியம் இல்லாமல் இருக்கலாம், இலக்கணம் இல்லாமல் இருக்கலாம். ஏதோ சிலர் பேசுகிறார்கள் என்பதற்காக அதைக் கொண்டு வருவது என்பது அது கேலிக் கூத்தாக இருக்கிறது. அது அந்நிய மொழியாகத்தான் இருக்கிறது. என்றாலும் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இந்தி வெறியர்களும், இந்தி ஆதரவாளர்களும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இந்தி வெறியர்கள் என்று நான் சொல்லும்போது உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார், போன்ற பிரதேசங்களிலிருந்து வருகிறவர்களைக் குறிப்பிடுகிறேன். இந்தி ஆதரவாளர்கள் என்று நான் குறிப்பிடும்போது இங்கே இந்தி வேண்டும் என்று ஆதரித்துப் பேசுகிறவர்களைக் குறிப்பிடுகிறேன், அதாவது சர்தார் வேதரத்னம் போன்றவர்களை இந்தி ஆதரவாளர்கள் என்று நான் குறிப்பிடுகிறேன்.

இதிலே யார் சொல்வதாக இருந்தாலும், "இந்தி மொழியில் என்ன இலக்கணம் இருக்கிறது. என்ன இலக்கியச் செறிவு இருக்கிறது?" என்று கேட்டால் துருவித் துருவிக் கண்டுபிடித்து அவர்கள் இரண்டு காவியங்களைத்தான்—காப்பியங்களைத்தான் காட்டுகிறார்கள். ஒன்று துளசிதாசர் எழுதிய இராமாயணம், மற்றொன்று ஆல் இந்தியா இரயில்வே கெய்டு, (சிரிப்பு) இந்த இரண்டையும்தான் தங்கள் மொழியில் உள்ள சிறந்த இலக்கியமாகக் காட்டுகிறார்கள்.

> கனம் ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம்:- நம்முடைய இலக்கியச் செல்வத்தை எத்தனை வேண்டுமானாலும் உயர்த்திப் பேசிக்கொள்ளலாம். அதற்காக இன்னொன்றைத் தாழ்த்தக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

"நான் மற்றவர்களைத் தாழ்வுபடுத்தவேண்டும், இழிவுபடுத்தவேண்டும், என்பதற்காகச் சொல்லவில்லை. நாம் தாழ்வுபடுத்தப்படுகிறோம், இழிவுபடுத்தப்படுகிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இரண்டாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வருகிற நம்முடைய தாய்மொழியாகிய தமிழ்மொழி ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்று ஒரு நாளாவது நமது நிதி அமைச்சர் அவர்கள் கேட்டிருக்கக்கூடாதா? அவர்கள் அதைத் தள்ளிவிடட்டும். ஒப்புக்கொள்ளாமல் போகட்டும். என்றாலும் நம்முடைய தாய்மொழி, தமிழ் இந்திய தேச ஆட்சிமொழியாக இருக்கவேண்டுமென்று நாம் வற்புறுத்தினோம் என்கிற மனச்சாந்தியாவது அவருக்கு ஏற்பட்டிருக்கக்கூடும். ஆனால் பரந்த மனப்பான்மை—வேதாந்த மனப்பான்மை என்றெண்ணி அவர் சொல்கிறார், "எல்லோரும் சொல்லலாம். நடப்பதாக இருந்தால் தான் சொல்லலாம். நடக்காத காரியத்தை வீணாகச் சொல்வானேன்" என்று. இரண்டு திங்களுக்கு முன்பாக மேற்கு வங்கச் சட்டசபையில் மொழிப் பிரச்சினை பற்றி விவாதம் நடக்கையில் வங்காளத்தையும் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்திய வங்கநாட்டுப் பெரியவர்கள் "தமிழ்மொழியும் மிகச் சிறந்தமொழி. அதையும் ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று பேசியிருக்கிறார்கள். கொங்குநாட்டு அமைச்சரிடத்தில் இருந்து கேட்பதற்குப் பதிலாக வங்கநாட்டில் இருந்து இதனைக் கூறக் கேட்பதற்குப் பாராட்டுவதா? எந்தவகையில் பாராட்டுவது என்று தெரியவில்லை.

தமிழ் ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்ற ஆர்வம் நமக்கு எழவில்லை. அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். தமிழ் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்று சொல்லக்கூட நாம் பயப்படுகிறோம். ஆனால் இதுவும் ஆட்சிமொழியாகத்தான் இருக்க வேண்டும் என்று அவர்கள் சொல்கிறார்கள். இப்படி நமது அமைச்சர் அவையில் உள்ளவர்களுக்கு—ஆளும் கட்சியாக உள்ளவர்களுக்கு தமிழ் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்று சொல்வதற்குக்கூடப் பயம் இருப்பதற்குக் காரணம் என்ன? அது, தான் உள்ளே இருக்கக்கூடிய அரசியல் தத்துவம் என்னைப் போன்றவர்கள் பேசுவதைப் பார்த்து—இப்படி அவர்கள் பேசினார்களாமே, நீங்கள் அவர்களை இப்படிப் பேசவிட்டு, கேட்டுக்கொண்டா இருந்தீர்கள் என்று கேட்டால், உடனே, "இல்லையே, உடனே குறுக்கிட்டு உங்களைப் பாராட்டிக்கொள்ளுங்கள், அதற்காக மற்றவர்களை இழிவுபடுத்தாதீர்கள் என்றல்லவா சொன்னேன்." என்றுச்சொல்லிக்கொள்ளத்தான் வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்கிறார் நிதி அமைச்சர்.

ஆகவே, இன்றைய தினம் ஒளிவு மறைவு இல்லாமல் பேசப்பட்டுவிடவேண்டும். நீங்கள் எதற்காக அச்சப்படுகிறீர்கள்? உங்களை யாரும் ஆதரிக்கமாட்டார்கள் என்று நினைக்கிறீர்களா? உங்களை ஆதரிக்க நாங்கள் இருக்கிறோம். நீங்களே நிரந்தரமாகப் பதவியில் இருக்கவேண்டுமா? இப்பொழுதே எங்களுடைய கட்சியின் ஒரு பகுதியினராகிய திராவிட கழகத்தினர் உங்களுக்குத்தான் ஆதரவு அளித்துக்கொண்டு வருகிறார்கள். நாங்களும்கூட—இந்தக் காரியத்தைச் செய்யுங்கள்—அதற்கு எங்களுடைய பாதுகாப்பைத்

தமிழ் தரத்தில் குறைந்ததல்ல

தருவதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால், நீங்கள் தமிழ்நாட்டின் எதிர்காலத்தைப் பாதிக்கின்ற வகையில் வடநாட்டாருக்குத் தாழ்ந்து போய்விடக்கூடாது. இந்தி மொழி ஆட்சிமொழியாக இருப்பதற்கு எந்த வகையிலும் தகுதி இல்லாதது. எந்த வகையான தேவையும் இல்லாதது.

இன்னொன்று காலையிலேயே கேட்கவேண்டுமென்று கருதினேன் — ஆட்சிமொழி ஆட்சிமொழி என்று பேசுகின்றோம். ஆனால் ஆட்சிமொழி என்றால் என்ன என்பதற்கு இன்னமும் தெளிவான விளக்கம் தரப்படவில்லை. ஆட்சிமொழி என்பது எந்த எந்தக் காரியத்திற்காகப் பயன்படுத்தப்படும், எவ்வாறு பயன்படுத்தப்படவேண்டும் என்பதற்கு இன்னமும் விளக்கம் தரப்படவில்லை. ஆட்சிமொழி என்றால் கார்டு கவர்களில் இருக்கவேண்டும், சட்டமன்றத்தில் பேசப்படவேண்டும், அந்நிய அரசாங்கத்தோடு தொடர்புவைத்துக்கொள்ள எழுதப்படவேண்டும் என்று இப்படி என்ன என்ன வகையில்தான் தீர்மானித்திருக்கிறார்கள் என்பதற்கு விளக்கம் நமக்கு இல்லை. அதற்குக் காரணம் அரசியல் அமைப்பின்படி ஆட்சி என்றாலே என்ன என்பதற்கு விளக்கம் இல்லாததுதான். இராஜ்ய நிர்வாகம், மத்திய நிர்வாகம், இரண்டும் சேர்ந்த நிர்வாகம் என்கிற அடிப்படையில் எது நம்முடைய ஆட்சியைச் சேர்ந்தது, எது அவர்களுடைய ஆட்சியைச் சேர்ந்தது, எது இரண்டு சர்க்காருடைய ஆட்சியைச் சேர்ந்தது என்று பிரித்துப் பார்க்கிறபோது நாம் ஒரு குழப்பமான நிலைமையில் இருக்கிறோம். இன்றைய தினம் நம்முடைய ஆட்சிமொழி என்று சொல்கிற நேரத்தில் நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் தெளிவாக விளக்கம் கொடுக்கவேண்டும். அது எத்தனைபேர்களை பாதிக்கக்கூடிய பிரச்சனையாக இருக்கிறது என்று. சென்னை சர்க்காரில் இருந்து மத்திய சர்க்காருக்கும், அல்லது சென்னைத் துரைத்தனத்தார், வங்கத் துரைத்தனத்தாருக்கும் எழுதுகிற கடிதப்போக்குவரத்து ஆட்சிமொழியில் இருக்கவேண்டும் என்றால் அதற்காக இப்படித் துருவித் துருவி வார்த்தைகளைக் கண்டுபிடிக்க வேண்டியதில்லை. அதற்காக இப்படிக் கோடிக்கணக்கில் பணத்தைக்கொட்டி வார்த்தைகள் கண்டுபிடிக்கவேண்டியதில்லை. இப்படி அவர்கள் தேடித்தேடி அலைவானேன்? இந்தி மொழியை வளப்படுத்துவானேன்? அவர்களுடைய உள்நோக்கம் எதுவோ அதை வடக்கே உள்ளவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்வதற்கு அவர்களுக்கு இப்போது துணிவு இல்லை. அந்தத் துணிவு இல்லாததற்குக் காரணம் அவர்கள் எங்களைக்கண்டு பயப்படுவதுதான் என்று நாங்கள் நம்புகிறோம். ஆனால் எங்களுடைய எதிர்ப்பைக்கண்டு எதற்காகப் பயப்படவேண்டும் என்று நீங்கள் கேட்கலாம்.

நாங்கள் 150-பேர், நீங்கள் 15-பேர்தானே என்று பேசலாம். ஆனாலும் வடநாட்டவர்களுக்கு இத்தகைய அச்சம், இந்த மாறுதல் எப்படி ஏற்பட்டது? இந்தி தேசிய மொழிதான் என்று பேசப்பட்டது மாறி, ஆங்கிலத்திற்குச்சமமாகவாவது இந்தியை எடுத்துக்கொள்ளக்கூடாதா என்கிற முறையில் வேதரத்தினம் போன்றவர்கள் பேச ஆரம்பித்திருக்கிறார்கள் என்றால் இது பரிதாபமாகக்கூட இருக்கிறது. இந்தியை கட்டாயமாக தேசியமொழியாக்கவேண்டும் என்கிற நிலையும், பிடியும் இப்போது தளர்ந்துவிட்டது. அதை அவர்களே உணர்ந்து வருகிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் நம் அமைச்சர் அவை ஏன் அதைத் திட்டவட்டமாக எதிர்க்கக்கூடாது என்று கேட்கிறேன்.

மதிப்பிற்குரிய திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் திரு. ராஜகோபாலாச்சாரியார் முன்னாளில் கொண்டிருந்த கருத்தையும், இப்போது கொண்டுள்ள கருத்தையும் எடுத்துக்காட்டினார்கள். ஒருமுறை கொண்ட கருத்தைத் தவறானதாக இருந்தால் மாற்றிக்கொள்ளவே கூடாது என்று நான் சொல்லமாட்டேன். அன்றைக்கு நண்பர் ராஜகோபாலாச்சாரியார் "எங்களுடைய கொள்கை A to Z கம்யூனிஸ்டுக் கட்சியை ஒழிப்பதுதான்" என்றார். அதே ராஜகோபாலாச்சாரியார் இப்போது "என்னுடைய கொள்கை A to Z காங்கிரஸ் கட்சியை ஒழிப்பதுதான்" என்கிறார். எப்போதைக்கெப்போது எதெது அவருக்குக் கெட்டது என்று தோன்றுகிறதோ அந்தக் கெட்டதை ஒழித்து நல்லதை வைத்துக்கொள்ளவேண்டும் என்கிற கொள்கையை அவர் வைத்துக்கொண்டிருக்கிறார். நாமே ஒரு காரியத்தைச் செய்துவிட்டாலும்கூட அது தீமையானதுதான் என்று தெரிந்தால் ஒப்புக்கொள்வதுதான் பெருந்தன்மை. ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் ஆச்சாரியார் காலத்தில் இந்தி வலுக்கட்டாயமாகப் புகுத்தப்பட்ட காலத்திலும்கூட எதிர்க்கத்தான் செய்தோம். இப்போதும் எதிர்க்கின்றோம். ஆகவே இன்றையதினம் அவரைப் பாராட்டுவதா, கண்டிப்பதா என்பதற்கு எங்களுக்கு அவசியம் இல்லை. ஆனால் விசித்திரமான ஒரு விஷயம் இதைப் பற்றி பேசுகின்றபோது எனக்கு நினைவுக்குவந்தது. எப்படி ராஜகோபாலாச்சாரியார் முன்னாளில் தாமே கட்டாயபாடமாக இந்தியைக் கொண்டுவந்துவிட்டு இப்போது அதை எதிர்க்கின்றாரோ அப்படியே மேற்கு வங்கத்தில் கல்விமந்திரியாக இருந்தவர் பிரபுல்லசந்திரகோஷ் அவர்கள் தம்முடைய காலத்

பிரிந்து போவதால் விரோதம் வந்துவிடாது

தில் கட்டாயமாக இந்தியைப் புகுத்திவிட்டு இப்போது பேசும்போது,

"I have Committed a mistake and I admit it"

"நான் தவறு செய்துவிட்டேன். அந்தத் தவறை ஒப்புக்கொள்கிறேன்" என்று சொல்கிறார். ஆகையால் அமைச்சர்கள் தவறு செய்யலாம். செய்யும் தவறை ஒப்புக்கொண்டு திருத்திக்கொள்வது தான் அமைச்சர் அவைக்கு இருக்கவேண்டிய பெருந்தன்மை. "இன்ன காரியம் நான் செய்துவிட்டேன். ஆகையால் கடைசி வரையில் அதிலேயே இருப்பேன்" என்று யாரும் சொல்லத் தேவையில்லை. இந்திக்கு இங்கேயுள்ள எதிர்ப்புப் போன்று ஆந்திராவில் இல்லையே, கேரளத்தில் இல்லையே என்று பல நண்பர்கள் பேசினார்கள். ஆனால் இந்தியை எதிர்த்து நாங்கள் கிளர்ச்சி துவக்கியபோது ஆந்திராவில் இருந்து பல நண்பர்களிடம் இருந்து எனக்குக் கடிதம் வந்திருக்கிறது. எங்களுக்கும் சேர்த்து நீங்கள் போராடி வெற்றி வாங்கித் தந்ததற்கு நாங்கள் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம் என எழுதியிருக்கிறார்கள். ஆனால் எனக்குக் கடிதம் எழுதியுள்ளவர்கள் நிதி அமைச்சருக்குப் பக்கத்தில் இருப்பவர்களைப் போன்ற அந்தஸ்து இல்லாதவர்களாக இருக்கலாம். என்னைப்போன்ற சாதாரண மக்கள் தான் அவர்கள். ஆனாலும் ஆந்திராவில் உள்ளவர்களும் கூட இங்கே நடக்கிற காரியங்களைக் கூர்ந்து கவனித்துப் பாராட்டுகிறார்கள். இந்தியத் துணைக்கண்டத்தில் இருக்கிற எல்லாப் பத்திரிகைகளும் இந்தி விஷயத்தில் கொண்டிருந்த பிடிவாதம் இன்றைய தினம் தளர்ந்து இருக்கிறது. அந்தப் பிடிவாதம் தளர்ந்ததற்குக் காரணம் தென்னாட்டில் இருந்து எழுந்த கிளர்ச்சிதான். இன்றையதினம் அது இந்த அளவோடு நிற்கவேண்டும், பிரிவினைக்குப் போகக்கூடாது என்கிற எண்ணம்தான் அந்த பத்திரிகைகளுக்கு எழுந்துள்ளது. இந்தியா ஒன்று, ஒன்று என்று பேசுகிறவர்களிடம் காட்டுவதைவிட அதிக மதிப்பு எங்களிடம் காட்டி,—பிரிந்து போகாதீர்கள், ஒன்றாக இருக்கலாம் வாருங்கள், என்று அந்தப் பத்திரிகைகள் எல்லாம் எழுதுவதைப் பார்க்கும் போது, சந்தோஷமாகக்கூட இருக்கிறது. ஆனால், சந்தோஷத்திற்காக சித்தாந்தங்களை விட்டுவிடுவது தமிழனின் மரபு அல்ல. அதை, தமிழ் மரபு அறிந்த நிதியமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் இந்த மன்றத்திற்கு வெளியே ஒப்புக்கொள்வார்கள் என்று எனக்குத் தெரியும். ஆகவே இந்திமொழி விஷயத்தில் எங்கள் கழகச் சார்பில் எடுத்துச் சொல்வது இதற்காக சட்டத்தை திருத்தியாகவேண்டும் என்பதாகும். சட்டத்தைத் திருத்துவதில் உள்ள சிக்கல்கள்பற்றி நமது நிதியமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். சிக்கல் நிச்சயமாக இருக்கும். எதிலேயும் சிக்கல் இருக்கும். ஆனால் சாமர்த்தியசாலிகள் முயற்சி செய்தால் சிக்கல்கள் தீரும். நமது நிதியமைச்சர் அவர்கள் அப்படிப்பட்டதொரு சாமர்த்தியசாலி என்பதை அவர்களே அடிக்கடி இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நானும் சில வேளைகளில் ஒப்புக் கொண்டிருக்கிறேன். ஆகவே, அவர்கள் இது சிக்கல்கள் நிறைந்தது என்று சொல்வதை விட்டு இதை நிறைவேற்றி வைக்கிறேன் என்று சொல்லவேண்டும். நிறைவேற்றி வைக்கிறேன் என்று சொல்லிவிட்டு அவரால் நிறைவேற்ற முடியாமல் போய்விடும் என்று நாங்கள் பயப்படவில்லை. ஏனெனில் அந்தக் கோட்டை சரிந்து கொண்டிருக்கிறது. 1945, 50ல் இருந்துவந்த பிடிவாதம் அல்ல இன்றையதினம் இருப்பது. இன்றையதினம் வடக்கே இருப்பதெல்லாம் இந்திக்காக நாம் எடுத்துக்கொண்ட முயற்சி வீணாகப் போய்விடக்கூடாதே என்பதுதான். அது சட்ட புத்தகம் வரையிலாவது இருக்கட்டும் என்று சொல்லக்கூடிய அளவிற்குத்தான் இருக்கிறதே தவிர முன்னாள் இருந்த கொடிகட்டி ஆண்ட நிலை அல்ல. அன்று கட்டிய கோட்டை இன்று சுக்கல்நூறாகிப் போயிருக்கிறது.

ஆகவே, தைரியமாக அரசியல் சட்டத்தைத் திருத்த முயற்சி எடுத்துக்கொள்ளலாம். அதற்கு அன்பழகன் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய தீர்மானத்தை சர்க்கார் தங்கள் தீர்மானமாக மாற்றிக் கொண்டு வருவதாகயிருந்தாலும் எனக்குப் பெருமை தான். ஒருமித்த கருத்து வரவேண்டும் என்பதற்காக இதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்கும் நேரத்தில், இதையொத்த ஒரு தீர்மானத்தை மேற்கு வங்க சட்டசபையிலும், மேற்கு வங்க மேல் சபையிலும் வேறு ஒருவர் கொடுத்த தீர்மானத்தை எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒருமுகமாக ஆதரித்து அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அதே போல் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதால், அமைச்சர் அவைக்கு ஒரு பங்கமும் வந்துவிடாது. அதனால் காங்கிரசுக்கு கௌரவம் கெட்டுவிடாது. அதனால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு பெரிய செல்வாக்கு வந்துவிடும் என்று பயப்படத் தேவையில்லை. எங்கள் செல்வாக்கைச் சிதைப்பதற்கு இவ்வளவு பேர்கள் இருக்கும்போது நீங்கள் எதற்காகப் பயப்படவேண்டும்? ஆகவே அச்சப்படாமல் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளுவதன் மூலம் இந்திய அரசியல் சட்டத்தின் 17வது பிரிவை மறுமுறையும் பரிசீலனை செய்து இந்தியாவிற்கு இந்தி ஆட்சிமொழி! அந்த இந்தி தேவநாகரி லிபியில் இருக்

அரசியல் சட்டத்தைத் திருத்துவது ஒன்றேவழி

கும் என்ற பகுதியை அறவே நீக்கிவிட்டு, இந்தியாவில் ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சிமொழியாக இருக்கும். இந்திய துணைக்கண்டத்தில் இருக்கிற மொழிகளில் ஒன்றோ, பலவோ ஆட்சிமொழியாவதற்கான தகுதி பெற்றதாக கருதப்படுகிற வரையில் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கும் என்ற வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். இதை நான் சொல்கிற நேரத்தில் ஆங்கிலத்திற்கு வக்காலத்து வாங்கிப் பேசுகிறோம், ஆங்கிலத்திற்கு ஆதரவாக பேசுகிறோம் என்று பலர் தப்பாகக் கருதுகிறார்கள். சில பேர்கள், ஆங்கிலம் படித்து விட்டால் அவர்களுக்குள்ள சலுகைகள், தமிழ் வந்தால் போய்விடும் என்ற பயத்தால் இப்படிச் சொல்கிறார்கள், என்று சொல்கிறார்கள்.

ஆங்கிலம் படிக்க எந்த அளவு புத்தி செலுத்தினார்களோ அந்தளவு தமிழில் செலுத்தினால் ஆங்கிலத்தில் எந்தளவு கீர்த்தி பெற்றார்களோ அந்தளவு தமிழிலும் கீர்த்திபெற முடியும். ஒரு மொழி, புத்தியைக் கொடுத்துவிடாது. ஆனால் புத்தியுள்ளவர்கள் எந்த மொழியிலும் நல்லது பெற முடியும். ஆகவே ஆங்கிலம் படித்துவிட்டார்கள் சிலர், அதில் கிடைக்கும் சலுகை கெட்டுவிடும் என்பதால் இந்தி வேண்டாம் என்கிறார்கள் என்று தப்புக்கணக்கு போட வேண்டியதில்லை. தமிழ் ஆங்கிலத்தைவிட தரத்தில் குறைவானது என்று நாம் எடுத்துக்கொள்ள தேவையில்லை. ஆட்சிமொழியாக, இரண்டாயிரம் ஆண்டுகளாக இருந்த மொழி. அப்படிப்பட்ட ஒரு மொழி படிப்படியாக நம்மிடம் வரும்போது அந்த மொழியோடுகூட ஆங்கிலமும் படிக்கவேண்டுமென்று சொல்லி, 'Any one of Indian Languages' இந்தியாவிலுள்ள வேறு மொழிகளில் ஒன்றையும் படிக்க வேண்டுமென்று இந்த மன்றத்தில் வலியுறுத்திச் சொன்னார்கள் நிதியமைச்சர் அவர்கள். அப்படியிருக்கும்போது, இந்திக்கு மட்டும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு இந்தி படிப்பதற்கு மட்டும் வழிவகைகள் செய்யப்பட்டிருக்கிறது என்பது மட்டுமல்ல, சர்தார் வேதரத்தினம் அவர்கள் காலையில் பேசியபோது சொன்னார்கள், எட்டாவது வகுப்பிலிருந்து 11வது வகுப்பு வரையில் இந்தி கட்டாயபாடமாக்கப்பட்டு அதை எல்லோரும் ஏற்றுக்கொண்டார்கள் என்று சொன்னார்கள். அப்படி அவர்போன்றவர்கள் நம்பத்தக்க அளவில், எண்ணத்தக்க அளவில் இருக்கிற அந்த முறையை மாற்றி இந்திய மொழிகளில் எதுவாகயிருந்தாலும் தெலுங்கு படிக்கவேண்டுமென்றாலும், கன்னடம் படிக்கவேண்டுமென்றாலும், மலையாளம் படிக்கவேண்டுமென்றாலும், குஜராத்தி படிக்க வேண்டுமென்றாலும், மராத்தி படிக்கவேண்டுமென்றாலும் வழிசெய்து தரவேண்டும். படிக்கவேண்டுமென்று கருதுகிற மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு இருக்கவேண்டும்? அந்த நிர்ணயத்தைச் சொல்லுங்கள். இத்தனை மாணவர்கள் கேட்டால் இன்ன மொழி ஆசிரியர் நியமிக்கப்படுவார் என்ற முறையை வகுத்து, பெற்றோர்கள், மாணவர்கள் எண்ணம் தெரிவிக்கும்போது, அந்தந்த மொழிகளில் படிக்க வழிவகை வகுத்துத்தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு; இந்த மொழிப் பிரச்சினையில் நாம் நிச்சயமாக குறிப்பிடத்தக்க, மகிழத்தக்க, பெருமைப்படத்தக்க அளவு வெற்றி பெற்றிருக்கிறோம், அந்த வெற்றி முழு வெற்றியாக வேண்டுமென்றால் இந்திய அரசியல் சட்டத்தின் 17வது பிரிவில் மகத்தான மாறுதல், தலைகீழான மாறுதல் என்றுகூடக் குறிப்பிடுவேன், செய்யவேண்டும்; அப்படிப்பட்டதொரு மாறுதல் இந்திய அரசியல் சட்டத்தில் செய்யப்பட வேண்டும்; செய்யப்படவேண்டுமென்பதோடு கூட ஒரு மொழிதான் ஆட்சிமொழியாக இருக்கவேண்டுமென்கிற எண்ணம் நீக்கப்பட்டு எந்தெந்த மொழிகள் ஆட்சிமொழிகளாவதற்குத் தகுதி படைத்தனவோ அவை எல்லாம் ஆட்சி மொழிகள் ஆக வழிவகைகள் செய்யப்படவேண்டும்; என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படிச் செய்வதால் குழப்பம் ஏற்படுமென்று நினைக்கவேண்டியதில்லை. இந்த மன்றத்தில் ஒரு மொழியில் பேசுகிறபோது இன்னொரு மொழியில் மொழி பெயர்த்துத் தரவேண்டுமென்று ஒரு தீர்மானம் கொடுத்து அது தோற்கடிக்கப்பட்டது; 150 பேர் ஒரு பக்கத்திலும், 15 பேர் இன்னொரு பக்கத்திலும் இருப்பதால். அதை இந்திய பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொண்டு ஒரு மொழியில் பேசினால் இன்னொரு மொழியில் மொழி பெயர்க்க 6, 7 லட்சம் செலவில் விரைவாக காரியங்கள் செய்து கொண்டு வருகிறார்கள். ஆக, நல்லதொரு காரியத்தைச் சொன்னால் அதன் எதிரொலி பல இடங்களிலும் கேட்கும் என்பதற்குச் சான்றுகள் இருக்கின்றன. ஆகவே நல்ல நோக்கத்தோடு தரப்படுகிற எங்கள் தீர்மானத்தைத் துரைத்தனத்தார் ஏற்றுக்கொண்டு தங்கள் கரங்களுக்கு வலிவு தேடி இந்திய அரசாங்கத்தினிடம் வாதாடி, போராடி இந்த மொழிப் பிரச்சினைக்கு நிரந்தரமான, எல்லோரும் கண்டு பெருமைப்படத்தக்க அளவிற்கு, தமிழ்ப் பண்புக்கு ஊறு நேராத முறையில் நல்லதொரு முடிவிற்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை நிறுத்திக் கொள்கிறேன்.

புதிய பொலிவு

—[எம். என். ஆர்.]—

பொழுது புலரப்போகிறது. அதோ கோழியின் குரல் மெதுவாக, ஆனால் கம்பீரமாக ஒலிப்பது காதில் கேட்கிறது!

கீழ்த்திசையில் உண்மையை உணர்த்தும் வெண்மையான நீண்ட சுடர்கள் கிளம்பிவிட்டன.

இருளே இனி உனக்கு வேலை இல்லை. ஓ! நீ தாவித்தாவி ஓடி ஒளிவதை நான் காண்கிறேன்! பயங்கரமான இருளினூடே எழும்பெருமூச்சுகளின் வெப்பத்தால் இனி உலகம் திணறவேண்டியதில்லை! நீண்டு வளர்ந்து நிற்கும் மரங்களின் இருண்ட நிழல்களுக்குக் கீழே இனித் துக்கம் தோய்ந்து நிற்க வேண்டியதில்லை. அவைகள் இனித் தலைகுனிந்து மௌனக் கண்ணீர் வடிக்கவேண்டியதில்லை. பசுமையான மரங்களே! உங்களுக்கு உயிர்கொடுக்கும் உத்தமன் அதோ கீழ்த்திசையில் செம்பொன் கீற்றுப் போல் எழுவதைக் கவனித்தீர்களா? இனிக் கவலை ஏன்? நீங்கள் தாங்கி நிற்கும் கண்ணீர் முத்துக்களை உதிர்த்துவிட்டு, சலசலவென அசைந்து நாட்டியமாடி அந்த உத்தமனுக்கு நல்வரவு கூறுங்கள். அந்த உத்தமன் நீண்ட வெண்மையான கரங்களால் உங்கள் கண்ணீரைத் துடைக்க வருகிறான்.

மரங்களிலே பதுங்கிக்கிடக்கும் கபடமில்லாப் பறவைகளே, உங்கள் சிறகுகளைத் தயாராக விரித்து வைத்துக்கொள்ளுங்கள். குரலெடுத்து இசை எழுப்பத் தயாராகுங்கள்.

இருளில் கிடந்து ஏங்கித்தவித்த இளங்காற்றே, நீயும் தயாராகிக் கொள்; உனக்கு உயிரூட்ட அதோ கீழ்த் திசையிலே கதிரவன் கிளம்பி விட்டான்!

மலர்களே கூம்பி நின்றது போதும்! இதழ் வெடித்து நறுமணத் துகள்களைக் காற்றிலே பரப்பி அவனை எதிர்கொண்டழையுங்கள்!

கருநிறவண்டே! ஏ! இசைவாணு! நீ இசை எழுப்பத் தயாராகிவிட்டாயா? அதோ பறவைகள் தங்கள் இறகுகளை அடித்துத் தாளம் போட ஆரம்பித்துவிட்டன.

தண்புனல் நதியே, மௌனமாகத் துயரத்துடன் ஓடியது போதும். இனிச் சலசலவென்று குதித்துக்கும்மாளமிடு, நீர்த்துளி மலர்களை வாரி இறை! உன்னிடத்தில் தன் எழிலைப் பார்த்துக் கொள்ள, அதோ கீழ்த்திசையிலே அவன் வந்துவிட்டான்!

வளைந்து, தலைகுனிந்துநிற்கும் நாணலே நிமிர்! அடசிறுபையனே? வானத்தை நிமிர்ந்துபாரடா, புதிய ஆற்றல் வருவதை. இன்னுமா நீ அழுது கொண்டிருக்கிருய்? சிரித்து நிமிர்ந்து நில்! அடே! தலை ஆட்டி ஆட ஆரம்பித்துவிட்டாயா?

ஏய்? யாரங்கே? நாணலுக்கும் கீழே சிறு பொந்தில் என்ன செய்கிருய்? அட நீயா? சின்னஞ்சிறு மீன் குஞ்சே! இன்னுமா உன் வட்டக் கண்களிலே மிரட்சி? தேவை இல்லை! வெளியேவந்து எட்டிப் பார், கீழ்த்திசையிலே பார்! யார் என்று!

தாமரையாளே! ஏ, தாமரையாளே! என்ன அப்படி எட்டி எட்டிப் பார்க்கிருய்? யார் உன் முகத்தை மறைப்பது? ஓ! உன்னைச் சுற்றிப் பார்த்துவிட்டு தங்கள் முயற்சி பலிக்காமல் திரும்பும் வண்டுகளா?

ஆனாலும், நீ இலட்சியக் காதலிதான்! அவன் வருகிறான் என்றதும், எப்படி 'மலர்ந்துவிட்டது உன்முகம்! கொடுத்துவைத்தவள்.'

அவன் வந்துவிட்ட மகிழ்ச்சியில் பிச்சைகேட்டுப் பாடிவரும் தும்பிகளுக்கு, உன்னுடைய தேனை வாரி வாரி வழங்குவாய்! என்ன இருந்தாலும் நீ பெருமை வாய்ந்த சீமாட்டி அல்லவா?

வண்ணப் பூச்சிகளே! உங்களுடைய அழகிய சிறகுகளால் தோரணம் கட்டுங்கள். ஏற்படப் போகும் மாறுதல்கள் தெரியவில்லையா?

மனிதர்களே! மடக்கிய கால்களை நீட்டுங்கள்! குறுக்கிய கைகளை நிமிர்த்துங்கள்! மூடிய கண்களைத் திறவுங்கள்! ஓய்ந்த எண்ணங்களை உலவவிடுங்கள்! ஒளிபொருந்திய விரிந்த வானத்தைப் பாருங்கள்! இதயக் கதவுகளைத் திறவுங்கள்! அதோ கீழ்வானில் உதயசூரியன் உதித்துவிட்டான்! வானகத்து அரசன்! வையகத்தின் உயிர்மூச்சு! உலகமே உன் பிரமாண்டமான கைகளை உதறி எழுந்து சோம்பல் முறித்துக்கொள். பார், கீழ்வானில் உதயசூரியன் உதித்துவிட்டதை! கைகளை அகலவிரித்து உண்மை எனும் ஒளிபொருந்திய ஆற்றல் மிகுந்த சுடர்களை உன் இதயத்திலே ஏற்றிக்கொண்டு புதிய பொலிவுடன் தோன்று!

★

தலைமை நிலையச் செய்தி

தலைமை கழகத் தேர்தல்

25—9—60 ஞாயிறு

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைக் கழக அவைத் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர், முக்கிய குழுக்கள் முதலிய தேர்தல்கள் 25—9—60 ஞாயிறன்று சென்னையில் நடைபெறும்.

இடம், நேரம், பிற விவரங்கள் அனைத்தும் பின்னர் அறிவிக்கப்படும்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

"இளைதாக முள்மரம் கொல்க"

—[மதியண்ணல்]—

'தீமை களையப்படுதல்வேண்டும்; நன்மை மட்டுமே வாழவேண்டும்.' இப்படித்தான் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. இலக்கியங்கள், நீதி நூல்கள் எல்லாமே தீமை ஒழிந்து நன்மை வாழவேண்டும் என்றுதான் கூறுகின்றன. ஆனால் தீமை இன்றுவரை அடியோடு ஒழிந்ததையும் காணோம். நன்மை வெற்றிக்கொடி நாட்டிச் செங்கோல் ஓச்சியதையும் காணோம். ஆனால் இத்தகைய நாட்டம் மட்டும் நாட்டில் குறையவில்லை.

கொலைஞனைக் கேட்டாலும், கள்வனைக் கேட்டாலும், நல்லவரே நாட்டில் வாழவேண்டும் என்றுதான் சொல்லுவர். தீமை வாழவேண்டும் என்று யாரும் சொல்லவும் காணோம். இருந்தும், தீமை வாழ்கிறது; தீயனைய கொடியோர் வாழ்கின்றனர். எத்தனையோ சமயங்கள், இயக்கங்கள் தோன்றியும் தீமையை உலகில் வெல்வது அரிதாகவே உள்ளது.

காலம் செல்லச் செல்ல, உலகம் நன்மையும் தீமையும் இயற்கைதான் என்று உணரத் துவங்கியது. காடுகளில் மானும், முயலும், மயிலும் மட்டும் வாழவில்லை. கரடியும், புலியும், சிங்கமும் வாழ்கின்றன. கொடுமையும் கொடுமையின்மையும் உலகத்தியற்கையாக உள்ளன. நாட்டுக்கு வேண்டிய நல்லவர்களும் சான்றோர்களும் உலகில் என்றும் இருப்பார்கள். கொலைஞரும் கள்வரும் உலகில் வாழ்ந்தே தீருவர். பாம்பும், கீரியும், காக்கையும், கருடனும் இயற்கையின் படைப்புக்களே என்று உணர்ந்தபோதிலும், எப்படியோ வாழ்ந்து மடிந்தால் போதும் என்ற அமைதி, அறிவாளிகள் நெஞ்சிற் பிறக்கவில்லை; அறம் வாழ அல்லும் பகலும் பாடுபடவே செய்கின்றனர்.

உலகில் பெரும்பான்மை பெறவேண்டியது நன்மை; சிறுபான்மையாய்ச் சிதறிக்கிடக்கவேண்டியது தீமை. ஆனால் இன்றைய நிலைமை இதற்கு மாறாக உள்ளது. தீமையின் கொடுங்கோலாட்சி வெற்றி முழக்கமிடுகிறது. நன்மை எங்கோ ஓரிடத்தில் தன் செங்கோல் செலுத்தினாலும் நடுநடுங்கிச் செத்துக்கொண்டிருக்கிறது. உரிமையுடன் ஆடி அழகு விளக்கம் செய்யவேண்டிய மயில் அஞ்சி அடங்கிக்கிடக்க, மரப்பொந்திலும் காடுகளிலும் மறைந்து அஞ்சிக் கிடக்கவேண்டிய நச்சுப் பாம்புகள் படமெடுத்து நடனமிடுகின்றதைப் போன்றது இது. மயிலாடும்சோலையில் பாம்பின் நடனம் நடப்பதை உலகம்ஆரவாரத்தோடு ஏற்கிறது. அறிவியக்கம் எவ்வளவு விரைவாக வளர்ந்த போதிலும், தீமை வாய்ந்த நச்சுக்குண்டுகள் பெருகிய அளவு நல்லாக்கங்கள் பெருகவில்லை. இவற்றை ஆக்கும் நாடுகள் எல்லாம் நன்மையான அமைதியையே—சமாதானத்தையே—விழைகின்றன. இருப்பினும் தீமையான போர் முழக்கமிடுதலை அவர்களால் குறைக்க முடியவில்லை.

உலகின் பேரறிஞர்கள் என்று பாராட்டுப் பெற்றவர்கள் எல்லாம் அறம் வாழத்தான் பாடுபட்டனர். பாடுபடுகின்றனர். மேலை நாட்டில் அறப்பெரு முழக்கமிட்டார் உலகப் பேரறிஞர் பெர்னட்ஷா. தன்னுடைய இறுதிக் காலத்தில், 'என்னுடைய நூல்கள் உலகத்தின் நல்லாக்கத்திற்குச் சிறிதும் துணை புரியாவிட்டால், அவற்றை எரித்துவிடலாம்' என்றும் சொன்னார்.

பெர்னட்ஷா சமுதாயத்தின் 'நோய் நாடி நோய் முதல் நாடி' உண்மையை உலகறியச் செய்தார். அடிப்படைக் குறைகளைச் சுட்டிக் காட்டினார். திருவள்ளுவரிடம் காணப்படும் சிறப்பே, அவர் சமுதாயத்தின் குறைகள் அடிப்படையிலேயே திருத்தப்பட வேண்டும் என்ற உள்நோக்குடன்தான் திருக்குறளை வழங்கியிருக்கிறார். தீமையை வென்று நன்மை வாழத் திருவள்ளுவர் கூறும் வழி இரண்டாயிரமாண்டுகட்கு முற்பட்டது; ஆயினும் உலகிற்குப் புதுவழியாகவே தோன்றுகிறது. அந்த வழி பின்பற்றப்பட்டால் உலகம் திருந்த வழியிருக்கிறது.

"முள் மரத்தை அது வளர்ந்து முற்றிய நிலை பெறாத இளமையிலேயே அழித்திடல் வேண்டும்; வளர்ந்துவிட்டுப் போகிறது என்று விட்டுவைத்து, மரமானதும் அதன் தீமை உணர்ந்து களைய முனைந்தால் களைபவர் கையில் வேதனை செய்யும்"

இளைதாக முள் மரம் கொல்க; களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து

தில் தாம் சொல்ல எண்ணிய கருத்தைத் திருவள்ளுவர் வெளிப்படையாகவே கூறியிருக்கலாம். ஆனால் அவரோ உவமையைமட்டும் காட்டுகிறார். சிந்தித்து உணரும் பொறுப்பை நம் கையில் தந்துள்ளார். "தீயவர்களை — அவர்கள் பெருகுவதற்கு முன் அழித்திடல் வேண்டும்; அவர்களை வளரவிட்டால், அவர்கள் நல்லவர்களைத் துன்புறுத்துவர். எனவே அவர்களைத் தீமையில் இளையராய் இருக்கும்போதே களைக" என்று திருவள்ளுவர் நினைத்திருப்பாரானால் வெளிப்படையாகக் கூறியிருக்கலாம்.

இப்படிக் கூறியிருந்தால், இது ஒன்றும் புது வழியில்லை. பலர் கையாண்டு தோல்வி கண்ட வழிதான். "கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல்" என்று அரசன் கொலை மேவுமிடம் கூறியவர் இதையும் வெளிப்படையாகவே குறிப்பிட்டிருப்பார். ஆனால் அவர் கூற நினைப்பது வேறு.

திருவள்ளுவர் நினைவெல்லாம் தீயவரை அழிப்பதில் இல்லை. நல்லவை வாழவேண்டும். தீமைகள் வளரக்கூடாது; அவை தேய்ந்து மறையவேண்டும் என்பதுதான். அதனால்தான் முள்மரத்தைச் சுட்டிக்காட்டி உணர்த்துகின்றார் மூத்த குடிப் புகழ் மூதறிஞர் வள்ளுவனார்.

மனிதன் இயற்கையாகவே தீயவனாக—முள் மரமாக—பிறப்பதில்லை. அவன் சூழ்நிலை அவன் மனதில் முள்ளை விதைத்துச் செடியாக்கி, மரமாக்குகின்றது. ஆகவே அழிக்கப்பட வேண்டியது முள்மரமேயன்றி — தீமையேயன்றி —தீயவரல்ல.

முட்செடியொன்று முளைக்கக் கண்டு, சின்னஞ்சிறு செடிதானே இது, அப்படியென்ன தொல்லை தந்துவிடப்போகிறது என்று வாளா இருந்தால், அது நாளை

வளர்ந்து நம்மை இவல்லத் துவங்கிவிடும். நச்சுக் கிருமிகட்குள்ள வேகமான வளர்ச்சி வேறு நல்லவற்றிற் இல்லையல்லவா?

நடைபாதையிலும் வீட்டுமுன்றலிலும் உள்ள செடிகளையெல்லாம் அகற்றி வேலிக்கப்பால் தூக்கியெறியவேண்டும். செடியாக இருக்கும்போது அவற்றைக் களைதல் எளிது. அதுபோலச் சூழ்நிலையில் தீமையை வளரவிடாது தடுத்தல் வேண்டும். அவை வளர்வதற்கு முன் தடுத்தல்தான் எளிது. முட்செடிகள் வேலியிலும், காட்டிலும் வளர்வதுபற்றிக் கவலையில்லை. அவற்றை உலகைவிட்டே களைய நினைப்பது வீண்முயற்சி. பாம்புகள் பொந்துகளில் வாழ்வதைப்பற்றிக் கவலையில்லை. அவை நடமாடும் வீதியில் உலவுவதுதான் தீமை.

இன்று தமிழகத்தை ஒரு தீமை—பெருந்தீமை—சூழ இருக்கிறது. அதுதான் இந்தித் திணிப்பு என்னும் தீமை. இந்தித் திணிப்புக் கொள்கை ஒரு இளைய முள் மரம். இது எப்படி நம் மொழியை நம் பண்பாட்டை அழித்துவிடும் என்று நாம் நினைக்கலாம். ஆனால் இந்த முட்செடி நாளை மரமாகி வலுப்பெற்ற பின் இது நம் இனத்தையே அழித்துவிடும் போலிருக்கிறதே என்று உணர நேரிடும்.

நேற்றுவரை கொச்சை மொழியாக—இலக்கண இலக்கிய வளமற்ற மொழியாக—மெலிந்து விளங்கிய இந்தி மொழியா இன்று வலிமை பெற்று நமக்குக் கேடு தருகிறது என்று உணர நேரிடும். இந்த இந்தி முட்செடியை நாம் வள்ளுவர் வழிநின்று களைதல் வேண்டும். தமிழர்தம் தலையாய கடமை இது. செடியாக இருக்கும்போது முள் சிறுதொல்லை தந்து தன் எதிர்கால வளர்ச்சியைக் காட்டுகிறது. இந்தித் திணிப்பால் இப்பொழுதே தமிழகம் அல்லற்படத் துவங்கியிருக்கிறதல்லவா?

தமிழ் மேதைகள், திருவள்ளுவர் வழி நிற்கும் தமிழ்ப் பேராசிரியர்கள் வள்ளுவர் கூறும் முள் மரமாம் இந்தி காழ்த்து வலுப்பெறும் முன் களைய முன் வருவார்களா? தமிழ் எழுதி வாழும் எழுத்தாளர்களின் எழுதுகோல்கள் இந்தியைக் கண்டித்து எழுதுமா? இன்று அனைவரும் வேலிக்கப்பால் முள் மரத்தைத் தூக்கி எறிதல்போல் இந்தியைக் களையாவிட்டால் இந்தி முள் மரம் நாளைக் காழ்த்து நம்மைக் கொல்லும்; நம் வாழ்வு போய்விடும். எனவே, தமிழக மேதைகள், தக்க சமயத்தில் தம் கடமையுணர்ந்து இளைதாக முள் மரம் கொல்ல முன் வரவேண்டும்.

●

குறையுமா?

[அன்பு. த. நாராயணசாமி]

"ஐயா, காலணா இருந்தால் தருமம் பண்ணுங்க ஐயா!"—கருமை நிறங்கொண்ட அவன் தன் இருகையேந்தி என்னை நோக்கிக்கேட்டான்! 'ஐயோ பாவம்' என்று அவனுக்கு இரண்டணா நாணயமொன்றை எடுத்துக் கொடுத்தனுப்பிவிட்டு, நானும் ஓரணாவிற்கு வேர்க்கடலை வாங்கித் தின்றுகொண்டிருந்தேன். காசு இருக்கும்போது கண்டவன் சொந்தம் கொண்டாடிக் குழைவதுபோல, என் கையில் கடலையிருப்பதைப் பார்த்துவிட்ட இரு சிறு பெண்கள் (ஏழைகள்தாம்!) என்னை நோக்கி வந்தனர்! எதிர்பார்த்து நின்றனர்! அவர்கள் வாய்திறந்து கேட்கவில்லை — திறக்கவேண்டிய அவசியமேயில்லை! அவர்களின் நிலைமையே அவர்களின் எண்ணத்தை வெளியிட்டுவிட்டது!! என் கையிலிருந்த கடலையை அவர்களிடம் கொடுத்துவிட்டு அலைபாய்ந்துகொண்டிருந்த அவ்விரிந்த கடலைநோக்கிக்கொண்டிருந்தேன். கடலில் நெடுந்தொலைவு செல்லும் கப்பலைப்போலவே என் நினைவும் நெடுந்தூரம் சென்றது. 'அப்பப்பா! இந்த ஏழைக் கும்பல்கள் தான் இந்தத் தமிழகத்தில் நிறைந்திருக்கும் போலும்! தகப்பன் இறந்ததால் ஏழையானோர் பலர்! அன்னையை இழந்த பிறகு தன்னை ஆதரிப்போர் யாருமில்லாததால், இந்த மண்ணை நம்பிப் பிச்சைக்காரர்களானோர் எண்ணிக்கை மட்டும் குறைவா?

'ஐயா, பச்சைக் குழந்தை ஐயா. பால் குடித்து இரண்டு நாளாகிறதய்யா! காலணா இருந்தால் கொடுங்கய்யா!' பாவம், பச்சிளம் பாலகன் பாலில்லாமல் பரதவிக்கிறான், இங்கே! அதோ அங்கே, 'யாரோ' பாராளும் மந்திரியாம்—அவருடைய பிறந்த நாள் விழாவாம்—அதற்காக 'பால்கோவாவாம்—சொம்பு சொம்பாகச் சுண்டக் காய்ச்சிய நறுமணம் கமழும் பாலாம்—வந்தவர்க்கெல்லாம்! 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பாலும் தேனும் வழிந்தோடும்!' என்றார்களே, அதன்படியே செய்து காட்டத்தான் அப்படிச் செய்தனரோ! நாம் அறியோம்!!

அந்த அம்மாளிடம் பேச எனக்கு என்னவோ வேதனையாகத்தானிருந்தது! இருந்தாலும் சிறிதுபேசி அவர்களுக்கு உதவி புரிய என்னால் முடியுமா என்பதை அறியவே முயன்றேன்.

அதற்குள் அவளே என்னைப் பார்த்து, 'என்னங்க பார்க்கிறீங்க' என்றாள்!

"ஒன்றுமில்லை. நான் கேட்கிறேன் என்று கோபித்துக்கொள்ள மாட்டீர்களே?" என்று கேட்டேன். "கோபமா! நான் கோபங்கொண்டால் என்வயிறு என்னைப் பார்த்துக் கோபங்கொள்ளுங்களே!" என்ற அவள், என் கேள்விகளுக்கெல்லாம் விடையளிப்பாள் என்றே தோன்றியது!

"நீ ஏன் இப்படிப் பிச்சையெடுக்கும் நிலைக்கு வந்தாய்?" என்பது தான் என் முதல் கேள்வி. அவளும், தன்னுடைய கதையைக்கூறி ஓரளவேனும் மன அமைதி அடையலாமென்று எனக்கெதிரிலேயே அமர்ந்தாள். அவளுடைய குழந்தைக்கு ஓரணாவிற்குப் பொரி வாங்கித் தந்தேன். அவன் அதைக் கொரித்துக்கொண்டே எங்கோ பார்த்துக்கொண்டிருந்தான்! பாவம், அவன் அறிவானா, அவன் அன்னைபடும் பாட்டை?

அவளும் தன் சோகக் கதையைக் கூற முனைந்தாள்.

"என் கதையைக் கேட்டு என்னங்க பண்ணப்போறீங்க. நீங்க கேக்கிறதைப் பார்க்கிலும் இந்த அரசாங்கம் கேட்டதுன்னா எத்தனையோ கோடி புண்ணியமுண்

டாருங்களே" என்று சிறிது நிறுத்தினாள்.

"என்ன அப்படி அரசாங்கம் கேட்கமாட்டேங்குது?" என்றேன்.

"பின்னே என்னங்க, அரசாங்கம் கேட்கிறதாக இருந்தா என் கணவர் இன்று உயிரோடிருந்திருப்பாருங்களே! நானும் இம்மாதிரியா வரவேண்டிய அவசியமேயில்லைங்களே!" என்று கூறியபடியே தன் துன்பக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

"என்ன, உன் கணவர் இல்லையா?" என்று கேட்டு அவள் கழுத்தைப் பார்த்தேன். ஆமாம், அவள் விதவை!

அப்படியானால், அவளை விதவையாக்கியது இந்த அரசாங்கமா? என்ன அநியாயம்! மக்கள் இனத்தைப் பெருக்கும் மங்கையர் குலத்தினை 'மல்டி'யாக்குவதும் இவ்வரசாங்கந்தான்! வில்லொடித்து வெற்போர் புரியும் வீரக் காளைகளை விளைவித்திடும் வீராங்கனைகளை 'விதவை'களாக்கி விடுவதும் இந்த வீணர் கூட்டத்தின் வீரச் செயல் தானோ? ஆமாம், விக்கி நின்ற அவளின் துயரம் வாய்வழியே வெளிவந்தது.

அவள் கணவன் ஒரு அலுவலகத்தில் பணியாற்றிவந்த குறைந்த வருவாயுள்ள ஊழியனாம்! அவன், தன் தொழிற்சங்கத்தின் அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டபடி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டானாம்! அதற்காக அவனுக்குக் கிடைத்த கடுந்தண்டனை 'வேலை நீக்கம்!' என்ன கொடுமை!! பிறந்த நாள் முதல் இறக்கும் நாள் வரையில் தேடித் தேடி அலைந்தாலும் இந்நாட்டில் கிடைத்தற்கரியதான ஒரு 'வேலை' அவனைவிட்டுப் போய் விட்டதே! வருத்தப்படவேண்டியதுதானே! வேலை நிறுத்தம் செய்தான் என்றால் அதற்காக அவனுக்கும் வேலை நிறுத்தமா?

'தனியாரை எதிர்த்து நடத்தும் வேலை நிறுத்தத்தைப்போல் ஜனநாயக அரசாங்கத்தை எதிர்த்து வேலை நிறுத்தம் செய்வது தவறு' என்று சொல்லிவிட்டு, 'தனியார் புரியும் வேலை நீக்கத்தைப்போல், ஜனநாயக அரசாங்கமும், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களை வேலையிலிருந்து நீக்குவது மட்டும் தவறல்லவோ? நமக்கு ஒரு விதி, அவர்களுக்கு ஒரு விதியா? பாவம், வேலையைப் பறிகொடுத்ததால் அவள் கணவன் 'வருமானம் போதவில்லை' என்று கேட்டதால் கிடைத்த வருமானம் — 'வேலை இல்லை' என்பதாம்! அவன் என்ன செய்வான்? எங்கெங்கோ சுற்றினானும், ஆனாலும் வேலை கிடைக்கவில்லையாம்! 'வேலைநிறுத்தம் செய்தவன்' எனவே அவனுக்கு வேலை கிடைக்கவில்லையாம்! சிறைக்குச் சென்று வந்தவர்களுக்கு எப்படி 'வேலை'கிடைப்பது அரிதோ, அதையும்விட அரிது அரசாங்கத்தில் வேலை நிறுத்தம் செய்துவிட்டு, மீண்டும் வந்து 'வேலை'கேட்பது! அவன் ஒரு குற்றவாளியாகிவிட்டான்! அரசாங்கமே அவனைக் குற்றவாளியாக்கிவிட்ட பிறகு, வேறுயார் அவனைநிரபராதியாக்க முனைவர்? பணம் தேடித் திரிந்தவன் மணம் புரிந்துகொண்ட தன் மனைவியையும் மறந்தான், மழலைபேசி மணங்கமழச்செய்யும் தன் குழந்தையையும் மறந்தான்— ஏன் — தன்னையே மறந்தான்! மனமொடிந்தவன் பிணமானன், நஞ்சுண்டு! 'ஐயோ!' 'காலமெல்லாம் உன்னைவிட்டுப் பிரியேன் சிறிதேனும்! நான் கஷ்டப்பட்டேனும் உன்னைக் கவலைக்கிடமாக்காமல் காப்பாற்றுவேன் என்று கூறியிருப்பான், தன் குல விளக்கிடம்! ஆனல், வேதனை அவனைச் சாகடித்துவிட்டது! தன்னைச் சார்ந்தோரை மறந்தான்! அவர்களைக் கைவிட்டான்! கணவனை இழந்த இவள் கைம்பெண்ணானாள்! அவர்களுக்குச் சொத்துமில்லை, சுகமுமில்லை! இருந்திருந்தால் இந்நிலை வந்திருக்காதே! கையொடிந்து, கால் ஒடிந்து பிச்சையெடுக்கும் கூட்டத்தினரில், 'இந்த முறையில்' சேரும் கூட்டமும் இப்போதுதான் அதிகரிக்கிறது! ஏழைகளின் சந்ததியை அதிகமாக்கி வரும் இந்தப் புதிய முறை இனியேனும் வற்றுமா வளருமா? ஏழைகளின் எண்ணிக்கை 'ஏவுகணை'போல் வேகமாகச் செல்வது இனியேனும், குறையுமா? ●

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
[illegible] (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.